

# மாலை தீப்பொறி


MALAE THEEPORI

2024 நவம்பர் 1-15 தொகுதி 23 இதழ் 7

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200



## நீதிக்கான பேரணி - புதிய பீகார்



# ஜார்கண்ட் சட்டமன்றத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தல்களில் இகக மாலெ

நடைபெறவிருக்கும் ஜார்கண்ட் சட்டமன்றத் தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலை நான்கு தொகுதிகளில் போட்டியிடுகிறது. ஏற்கனவே ஜார்கண்ட் மாநில சட்டமன்ற உறுப்பினராக உள்ள தோழர் வினோத் சிங் பகோதார் தொகுதியில் போட்டியிடுகிறார். தோழர் அருப் சட்டர்ஜி நிர்ஷா தொகுதியிலும் தோழர் சந்திரதியோ மகாதோ சிந்திரி தொகுதியிலும் தோழர் ராஜ்குமார் யாதவ் தன்வார் தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள். தன்வார் தொகுதியில் இகக(மாலெ)வுக்கும் ஜேஎம்எம்-மிற்கும் இடையே நட்புப் போட்டி உள்ளது. மற்ற மூன்று தொகுதிகளில் இந்தியா கூட்டணியிலிருந்து போட்டியிடுகிறது. நான்கு தொகுதிகளிலும் வரும் நவம்பர் 20 அன்று தேர்தல் நடக்கவிருக்கிறது. ஜார்கண்ட் மாநிலத்தில் கிரிதி மாவட்டத்தில் உள்ள பகாதோர் சட்டமன்றத் தொகுதியில் 2014ல் நடந்த தேர்தலில் மட்டும் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் இகக(மாலெ) தோல்வியுற்றதைத் தவிர 1990லிருந்து தொடர்ந்து இகக(மாலெ) பகாதோர் தொகுதியில் வெற்றி பெற்று வருகிறது. 2005 சட்டமன்றத் தேர்தலின் போது வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு வந்த பின்னர், படுகொலை செய்யப்பட்ட தோழர் மகேந்திர சிங் அந்தத் தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்று வந்தார். 2005 தேர்தல் ஜார்கண்ட் தனி மாநிலமாக உருவான பின் நடைபெற்ற முதல் சட்டமன்றத் தேர்தல் ஆகும். 2005ல் இருந்து, 2014-2019 தவிர, தோழர் வினோத் சிங் அத் தொகுதியில் தொடர்ந்து இகக(மாலெ) சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். இறப்பதற்கு முன்னர் நடைபெற்ற தன்னுடைய கடைசி தேர்தல் உரையில், தோழர் மகேந்திர சிங், பகாதோர் தொகுதி மக்களுக்கும் இகக(மாலெ)வுக்குமிடையே குடும்ப ரீதியான உறவு உள்ளதே தவிர தேர்தல் ரீதியான உறவு கிடையாது என்று கூறினார்.

தன்வார் தொகுதியில் 2014ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தோழர் ராஜ்குமார் யாதவ் ஜார்கண்ட் விகாஸ் மோர்ச்சாவின் பாபுலால் மாரண்டியைத் தோற்கடித்தார். 2019ல் வெற்றி பெற்ற பாபுலால் மாரண்டி மக்களுக்கு துரோகமிழைத்து பாஜகவில் ஐக்கியமானார். தற்போது மக்கள் அவருக்கு பதிலடி கொடுக்கக் காத்திருக்கிறார்கள். 2019 தேர்தலில் 6ஆவது இடத்தைப் பெற்ற ஜேஎம்எம், கெடுவாய்ப்பாக தன்வார் தொகுதியில் வேட்பாளரை நிறுத்தியுள்ளது.

மேலும் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தல்களில் பீகார், அசாம் மற்றும் மே.வங்கத்தில் தலா ஒரு தொகுதியில் இகக(மாலெ) போட்டியிடுகிறது. மேற்கு வங்கத்தில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுகின்றன. இகக(மாலெ) நைகாட்டி தொகுதியில் போட்டியிடுகிறது. அத் தொகுதியில் தியோதி மஜூம்தார் இகக(மாலெ) வேட்பாளர் ஆவார்.


ஊழியர் கூட்டத்தில் தோழர் திபங்கர்


தோழர் அருப் சட்டர்ஜி


தோழர் வினோத் சிங்


தோழர் ராஜ்குமார்

மாலை தீப்பொறி

இருவார இதழ்

2024 நவம்பர் 1 - 15

தொகுதி 23 இதழ் 7

முதன்மை ஆசிரியர்

சங்கர் .வீ

ஆசிரியர்

ஜி. ரமேஷ்

ஆசிரியர்குழு

பழ. ஆசைத்தம்பி

பாலசுந்தரம்

அ. சந்திரமோகன்

கே. ஜி. தேசிகன்

மேலாளர்

சொ. இரணியப்பன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக்
கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

**தலையங்கம்**

# திமுக அரசின் தனியார்மயத் தாகம்

தமிழ்நாட்டில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தூய்மைப் பணிகளுக்கான பணிகளில் வேலை செய்யும் ஓட்டுநர்கள் ஆகியோர்கள் ஒப்பந்தப் பணியாளர்களாக தனியார் நிறுவனங்களின் கீழ் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை அரசு ஊழியர்களாக அறிவித்து பணி நிரந்தரப்படுத்த வேண்டும் என்கிற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வருகின்றது. அதுபோன்று பல ஒப்பந்தப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம் என்று சொல்லிதான் திமுக தேர்தலின் போது வாக்குறுதியளித்து, ஆட்சியைப் பிடித்தது. ஆனால், தற்போது அளித்த வாக்குறுதிக்கு மாறாக, அரசின் கைகளில் உள்ள பல துறைகளை தனியாரிடம் ஒப்படைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ்நாட்டில்தான் பொதுப் போக்குவரத்து வசதி சிறப்பாக உள்ளது என்பதை அனைவரும் அறிவர். ஆனால், போக்குவரத்துத்துறையை படிப்படியாக தனியாரிடம் ஒப்படைப்பதற்கான வேலை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அரசு போக்குவரத்து கழகங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். வழக்கமாக தீபாவளியின்போது பொது மக்கள் வசதிக்காக அரசுப் பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்படும். இந்த முறை அரசாங்கமே தனியார் பேருந்துகளை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு எடுத்து இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. கல்வி ஏற்கனவே தனியாரிடமும் இருக்கும் நிலையில், அரசுப் பள்ளிகளையும்கூட தனியார் நிறுவனங்கள் தத்து எடுத்து நிர்வாகம் செய்வது, அரசு மருத்துவமனைகளை தனியார் நிறுவனங்கள் தத்து எடுத்து நிர்வாகம் செய்வது என்று ஆலோசனைகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசு மருத்துவமனையான சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு தலைமை மனநல மருத்துவமனையை தனியார் பொறுப்பில் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என்று சுகாதாரத் துறை செயலாளர் பரிந்துரைத்துள்ளார். இதற்கு எதிர்ப்பு கிளம்பிய நிலையில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அரசு மனநல மருத்துவமனை நிர்வாகத்தில் தனியாரை அனுமதிக்கும் எண்ணம் இல்லை என்று கூறியிருக்கிறார். அப்படியொரு எண்ணம் இல்லையென்றால், சுகாதாரத் துறைச் செயலாளர் அப்படியொரு பரிந்துரையை ஏன் மேற்கொள்ள வேண்டும். நிர்வாகத்தில் கோளாறு இருக்கிறது என்றால், அதற்குப் பொறுப்பு அரசும் அரசு அதிகாரிகளும்தானே. அதை அவர்கள்தானே சரி செய்ய வேண்டும். அதற்குப் பதிலாக, நிர்வாகத்தை லாபமே நோக்கமாகக் கொண்ட தனியார் நிறுவனங்களின் கையில் கொடுப்பது என்பது எப்படிச் சரியாகும். தனியார் பள்ளிகளை, தனியார் மருத்துவமனைகளை, தனியார் பேருந்துகளை பொது மக்கள் அதிகம் பயன்படுத்துகிறார்கள், விரும்புகிறார்கள் என்பதும், 'தனியார் நிர்வாகம் என்றால் சிறப்பு, அரசு நிர்வாகம் என்றால் அலங்கோலம்' என்பதும் முதலாளித்துவ அரசுகளால் திட்டமிட்டு மக்களின் பொதுப் புத்தியில் திணித்து வைக்கப்பட்டுள்ளது. வேண்டுமென்றே அரசு நிர்வாகத்தை கோளாறாக, ஊழல் பிடித்ததாக இருக்கிறது என்று ஒரு அரசே கூறுவது அந்த அரசுக்குத்தானே அவமானம். கோளாறையும் ஊழலையும் அரசு சரி செய்வதற்குப் பதிலாக, ஆட்சியாளர்களுக்கும் நிர்வாகக் கோளாறுக்கும் ஊழலுக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல், அவை அதிகாரிகளால் நடக்கின்றன என்பதுபோல் காட்டி மக்களை

தலையங்கம் தொடர்ச்சி 15ம் பக்கம்..



# ஆர்எஸ்எஸ் நூற்றாண்டு: நவீன இந்தியாவின் மீதான தடையற்ற பாசிசத் தாக்குதலின் நெடுங்கதை

ஆர்எஸ்எஸ் இப்போது அதனுடைய நூற்றாண்டுக்கு முந்தைய ஆண்டுக்குள் நுழைகிறது. ஆர்எஸ்எஸ் அதன் நூற்றாண்டை எவ்வாறு அணுகுகிறது என்பதைப் பற்றி சில விரிவான கருத்துக்களை 99 ஆவது நிறுவன நாள் அல்லது விஜயதசமி நாள் உரையில் ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத் நமக்கு தருகிறார். இருப்பினும் அதன் கருவில், மிகவும் அடிப்படையான செயல்பாட்டு வழிமுறையில் ஆர்எஸ்எஸ் ஒரு சதிகார அமைப்பு என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதன் கருத்தியல் பிரகடனங்களும், பொதுவெளியில் அது வெளிப்படுத்தும் கூற்றுகளும் ஒரு மேலோட்டமான பார்வையை மட்டுமே நமக்குத் தருகிறது. ஆனால், முன்னெப்போதும் இல்லாத அதிகார நிலையிலிருந்து ஆர்எஸ்எஸ் இப்போது செயல்படுகிறது; அதனால் இன்னும் ஏராளமானவை வெளிப்படுவதற்கான வசதி வாய்ப்புள்ளது. அதிலும் குறிப்பாகப் பார்த்தால், மோடி அரசாங்கத்துக்கும் பரந்த சங்கிப் படையின் செயல்பாட்டிற்கும் இடையே ஒரு ஒருங்கிணைக்கும் மையமாக அல்லது ஒரு பாலமாக ஆர்எஸ்எஸ் விளங்குகிறது என்பது தெரியும்.

ஆர்எஸ்எஸ்- இன் மையக் கருப்பொருளாக இருப்பது இந்து ஒருங்கிணைப்பேயாகும். அந்த இலக்கை அடைவதற்கு அது ஒரே நேரத்தில் இந்துக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் இந்துக்களின் பெருமை, அதிகாரம் என்றும் இரட்டைச் சீட்டுகளை கொண்டு களமாடுகிறது. சர்வதேச வளர்ச்சிப் போக்குகள் குறித்து கூறும்போது பகவத், தனக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்டு இஸ்லாம் ஆக்கிரமிப்பு , இந்துக்களுக்கு ஆபத்து என்று தனக்கேற்றவாறு திரித்துக் கூறுகிறார். குழந்தைகளை, பெண்களைக் கொன்று ஓராண்டு காலமாக இஸ்ரேல் நடத்திவரும் பாலஸ்தீன இனப் படுகொலை அவருக்கு இஸ்ரேல்-ஹமாஸிற்கு இடையேயான முரண்பாடு. வங்கதேசத்தில் நடந்த மக்களின் எழுச்சியானது, இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகளை அதிகாரத்திற்கு கொண்டு வர நடத்தப்பட்ட வன்முறையிலான ஆட்சிக் கவிழ்ப்பு என்றார். அதேமூச்சில், வங்கதேச மக்கள் இந்தியாவுக்குள் ஊடுருவுவது ஆபத்து அது இந்தியாவின் மக்கள் தொகையில் சமமற்ற நிலையை ஏற்படுத்தும் என்கிறார். இப்படி தர்க்கரீதியான கேள்விகளை மட்டுமே எழுப்பும் பகவத் அவற்றுக்கு பதில் அளிப்பதை பற்றி ஒருபோதும் கவலைப்படமாட்டார்.

மக்கள்தொகை தரவுகள் பற்றிய ஒரே நம்பத்தகுந்த ஆதாரம் என்பது பத்தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படும் கணக்கெடுப்பு மட்டுமே. மோடி அரசாங்கமோ வாட்ஸ்அப் பல்கலைக்கழக வதந்தி ஆலைகள் உருவாக்கும் பொய்யான மக்கள் தொகை புள்ளிவிவரங்களை வைத்து குழப்பிக் கொண்டேயிருப்பதற்காக 2021 ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பை கவனமாகத் தவிர்த்து வருகிறது. மோடியின் ஆட்சி காலத்தில் எல்லை தாண்டி ஊடுருவல் நடக்கிறது என்றால், நாட்டின் எல்லையைப் பாதுகாப்பதற்கான அதிகாரமும் கடமையும் மோடி அரசாங்கத்திடமே இருக்கும் போது, அதற்கான பொறுப்பை நிச்சயமாக அவரது அரசாங்கம்தானே ஏற்க வேண்டும். வங்க தேசத்தில் இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகள் ஆட்சி செய்வதால் அங்குள்ள இந்துக்களுக்கு பெரும் ஆபத்து நேரிடும் என பகவத் கூறுகிறார். அப்படியென்றால் வங்கதேச முஸ்லிம்கள் அல்ல, வங்கதேச இந்துக்களே இந்தியாவுக்குள் நுழைவார்கள் என்றுதானே இந்தியா எதிர்பார்க்க வேண்டும். இந்துக்கள் என்றால் அகதிகள், அதுவே வங்கதேச முஸ்லீம்கள் என்றால் ‘ஊடுருவல்காரர்கள்’ என்று அவர்களுக்காகவே ஒதுக்கி வைத்துள்ளார்கள். இது சங்கிகளின் சொல்லகராதி பழக்கமானவர்களுக்கு புரியும்.

இருப்பினும் இந்தியப் பொது மக்களை ஏமாற்றவும் அச்சுறுத்தவும் வங்கதேச ஊடுருவல்காரர்கள் என்ற பூச்சாண்டியை ஆர்எஸ்எஸ் தொடர்ந்து பயன்படுத்துகிறது.

அனேகமாக உலகளாவிய அனைத்து ஒப்பீட்டுக் குறியீடுகளிலும் இந்தியா, அபாய கட்டத்தில் இல்லையென்றாலும், வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது என்று காட்டும்போதுகூட மோடி ஆட்சியில் இந்தியா அனைத்து முனைகளிலும் மாபெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது என நாம் நம்ப வேண்டுமென மோகன் பகவத் விரும்புகிறார். உலக பட்டினிக் குறியீடு, பசி தொடர்பான உலகளாவிய வரைபடத்தில் இந்தியாவை மோசமான கவலைக்குரிய இடத்தில்தான் மீண்டுமொருமுறை வைத்திருக்கிறது.127 நாடுகள் உள்ள இந்த பட்டியலில் வங்கதேசம், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளுக்கு பின்னால் 105 ஆவது இடத்தில்தான் இந்தியா உள்ளது. பகவத்தைப் பொறுத்தவரை இந்தியாவுக்குள் நடைபெறும் எதிர்ப்பு இயக்கங்கள் அனைத்தும் இந்தியாவுக்கு தொல்லைகளும் தடைகளுமே ஆகும். உண்மையில் அவர், 'நாட்டின் வடமேற்கு எல்லைப் பகுதிகளான பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர், லடாக்; கடல் எல்லைப் பகுதிகளான கேரளா, தமிழ்நாடு; பீகார் முதல் மணிப்பூர் வரையிலான ஒட்டுமொத்த (பூர்வாஞ்சல்) கிழக்கு பகுதியும் என இந்தியாவின் பிரச்சனைக்குரியவை என்கிறார். ஒரு பகுதியை பிரச்சனைக்குரிய பகுதி என்று சொன்னால் அங்கு ஜனநாயகத்தை முழுவதுமாக முடக்கி வைப்பதற்கும், மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படப் போவதற்குமான முதல் படியாகும். நாட்டை தொல்லைக்குட்படுத்தவும் சீரழிக்கவும் சிதைக்கவும் முயற்சிகள் அனைத்து திசைகளில் இருந்தும் உந்துதலை பெறுகின்றன என பகவத் நமக்குச் சொல்கிறார்.

மாற்றுக் கருத்துகளுடன் ஒவ்வொரு சர்வாதிகாரிக்கும் பிரச்சனை இருப்பது போலவே, ஆர்எஸ்எஸ்-ன் ஒவ்வொரு அடையாளத்துடனும் சவால்களைச் சந்திக்கும் அதன் கருத்துடனும் அதற்கு பிரச்சனை உள்ளது. அல்லது அனைத்து முயற்சிகளுக்குப் பிறகும் ஆர்எஸ்எஸ் அதனை பொருத்தமுடையதாக்கத் தவறிவிட்டது. கோல்வால்கரின் காலத்தைப் போலல்லாது பகவத்தால் ஒற்றை அரசு, அதிபர் முறை ஆகியவற்றுக்கு ஆதரவாக வெளிப்படையாக அழைப்பு விடுக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் தனித்த அடையாளங்களையும் நாடாளு மன்ற ஜனநாயகத்தின் போட்டி இயல்பையும் கட்டுப்படுத்துவதற்கான ஆணைகளை ஆர்எஸ்எஸ் பிறப்பிக்க முடியும் என அவர் நம்புகிறார். 'செயற்கை அடையாளங்'களை உருவாக்குவதாகவும் இந்திய கலாச்சார மரபு, தேச நலன்கள் என அவர் அழைப்பவற்றுக்கு ஒவ்வாத அந்நியக் கருத்துகளை இறக்குமதி செய்வதாகவும் 'விழிப்புணர்வுவாதம்' (*wokeism*), 'கலாச்சார மார்க்சியம்' ஆகியவற்றின் மீது பழி சுமத்திய அவருடைய 2023 உரையையே திரும்பவும் அவர் நிகழ்த்தினார். பகவத்தின் இலட்சிய இந்தியாவில் கௌரி லங்கேஷ், ஸ்டேன்சாமி, ஜி.என்.சாய்பாபா அல்லது உமர் காலித் போன்ற மாற்றுக் கருத்துடையவர்களுக்கு இடமில்லை; எவ்வித 'மாற்று அரசியலுக்கும்' இடமில்லை. அப்படியென்றால் சமூக மாற்றம், ஒருங்கிணைந்த நீதி, திறன்மிக்க சமத்துவம் ஆகியவை பற்றிய ஒவ்வொரு பார்வையும் முழுவதுமாக ஒழித்துக் கட்டப்படும் என்றே அதற்கு அர்த்தமாகும்.

பலவீனமானவர்களை கடவுளும் கூட காப்பாற்ற மாட்டார் என பகவத் கூறுகிறார். வேறு வார்த்தைகளில் கூறினால் சிறுபான்மையினர் விளிம்பு நிலை குழுக்கள் ஆகியோர் மீதான தாக்குதல்கள் தற்போது தெய்வீகக் கடமையாக புனிதப்படுத்தப்பட்டுள்ளன. ஆர்எஸ்எஸ்-ன் 99ஆம் ஆண்டு விழாவில் பகவத் தனது உரையில், பலவீனமானவர்களைத் தாக்குவது, பன்மைத்துவத்தை நொறுக்கித் தள்ளுவது, மாற்றுக் கருத்துக்களை சட்டவிரோதமாக்குவது, பெரும்பான்மையை தேசத்தோடு இணைத்து குழப்புவது என்ற பாசிச ஒழுங்கின் திட்ட வரைபடத்தை மறைக்க முயற்சிக்கவில்லை. ஆர்எஸ்எஸ்-ன் நூற்றாண்டு பயணம் குறித்து வெளியிடும் போது, வரவிருக்கும் மகாராஷ்டிரா, ஜார்கண்ட் தேர்தல்கள் குறித்தும் பகவத் நன்றாகவே அறிந்து வைத்துள்ளார் என்பது உண்மைதான். எனவே கோவில் கட்டுமான பணிக்காக அறியப்படும் மராத்தா கூட்டமைப்பின் ஹோல்கர் குடும்ப ராணி அகில்யா பாய் அவர்களின் 300 வது பிறந்த ஆண்டு விழா, சங்கி கதையாடலில் அவருடைய காலனிய எதிர்ப்பு வரலாறும் கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராக பழங்குடியின மக்களின் எதிர்ப்பு போராட்டம் என்ற தற்போதைய பின்னணியும் பறிக்கப்பட்ட பிர்சா முண்டாவின் 150 ஆவது பிறந்த ஆண்டு விழா, தியோகரின் அனுகுல்சந்திரா-வால் அமைக்கப்பட்ட சத்சங்கத்தின் நூற்றாண்டு விழா ஆகியவை ஆர்எஸ்எஸ் நூற்றாண்டு விழாவோடு ஒரே நேரத்தில் வருகிறது என நமக்கு நினைவுபடுத்தப்படுகிறது. சுதந்திர இந்தியாவின் அரசமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட போது, வெளிப்படையாக அதனை நிராகரித்த ஒரு அமைப்பு இன்று அரசமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்ட 75வது ஆண்டு விழாவை நாம் அனுசரிக்கும் வேளையில் குடியரசின் எதிர்காலத்திற்கான விதிகளை நிர்ணயிக்கிறது. இதுதான் அம்பேத்கர் முன்னுணர்ந்து நம்மை எச்சரித்த மாபெரும் பேரழிவாகும். இந்தப் பேரழிவை வென்று கடக்க இந்தியக் குடியரசும் அதன் மக்களும் தங்களது அனைத்து உள்ளார்ந்த வலிமையையும் துணிவையும் நிச்சயமாக வரவழைக்க வேண்டும்.

# திமுக 75; அதிமுக 53 !?

இளவழகன்

1949ல் தொடங்கப்பட்ட திமுக, பவள விழாவை கொண்டாடியுள்ளது. 1972ல் உருவாக்கப்பட்ட அதிமுக, 53 வது ஆண்டில் நுழைந்ததை கொண்டாடியுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு முன் உருவான திராவிட இயக்கத்திலிருந்து கிளைத்த இந்தக் கட்சிகள்தான் கடந்த 57 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் கோலோச்சி வருகின்றன. இந்தியாவின் பல பகுதிகளில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியிருந்தன. அநேகமாக தமிழ்நாட்டில்தான் சமூக சீர்திருத்த பின்புலத்திலிருந்து அரசியல் கட்சியாக திமுக உருவானது.

அப்போதிருந்த பொது எதிரி காங்கிரசுக்கு எதிராக, எதிரும் புதிருமான -ராஜாஜியின் சுதந்திரா கட்சி உள்ளிட்ட- கட்சிகளைக் கொண்ட கூட்டணியை அறிஞர் அண்ணாதுரை உருவாக்கினார். காங்கிரசிலிருந்து வெளியேறிய பெரியாரை பின்பற்றியவர்கள், ஆட்சியிலிருந்து காங்கிரசையே வெளியேற்றினார்கள். அகில இந்திய அளவிலும், மாநிலத்திலும் மக்கள் மத்தியில் உருவாகியிருந்த காங்கிரஸ் எதிர்ப்பை ஆட்சி அதிகாரமாக அறுவடை செய்து கொண்டது திமுக.

திமுக தனது பயணத்தில், தமிழக, அகில இந்திய அரசியல் சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக்கொண்டு 75 வது ஆண்டிலும் வெற்றிகரமாக அரசியல், பண்பாட்டுத் தளங்களில் உயர்ந்து நிற்பதாக, திமுக தலைவர்கள் பவளவிழா உரைகளில் முழங்கினர். மூன்று பிளவுகளைக் கண்டிருந்தாலும், தொடர்ந்து 13 ஆண்டுகள் ஆட்சி அதிகாரத்தில் இல்லாமல் போயிருந்தாலும், மீண்டும் ஆட்சியை பிடித்து, ஆறாவது முறையாக ஆட்சியிலிருக்கிறது; அகில இந்திய அரசியலிலும் தனக்கென ஒரு வலுவான அடையாளத்தையும் பெற்றுள்ள திமுக, அடுத்த “நூறாண்டுகளுக்கு அசைக்கமுடியாத சக்தியாக” இருக்குமென்று திமுக தலைவர்கள் இடிமுழக்கமிட்டனர். திராவிட மாடல் அரசாக வளர்ச்சி பெற்று இந்தியாவுக்கே முன்னு தாரணமாக விளங்குவதாகவும் போர்ப்பரணி பாடினர்.

1967ல் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த திமுக அதன் ஆட்சிக் காலங்களில், தமிழ்நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார தளங்களில் மிக முக்கியமான பல செயல்களைச் செய்தது. தமிழ்நாடு என்று பெயர் சூட்டல், சீர்திருத்தத் திருமணங்களுக்கு அங்கீகாரம், கை ரிக்ஷா ஒழிப்பு, பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம், அருந்ததியருக்கு உள்ஒதுக்கீடு போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். இந்திராகாந்தியின் அவசரநிலை பிரகடனத்துக்கு எதிராக குரல் கொடுத்து ஆட்சியை பறிகொடுத்தது. இந்திரா சுயேச்சாதிகாரத்தை முறியடித்து ஜனநாயகத்தை மீட்ட அகில இந்திய அரசியலிலும் முக்கிய பங்காற்றியது.

திமுகவிற்கு மறுபக்கமும் உண்டு. அதன் தொழில் வளர்ச்சி கொள்கை, ஆட்சியிலும் கட்சியிலும் முதலாளிகள் செல்வாக்குபெற இடமளித்தது. பிற்படுத்தப்பட்ட சாதி, கிராமப்புர ஆதிக்க சக்திகளே கட்சியை ஆக்கிரமித்துக் கொண்டனர். தொழிலாளர் போராட்டங்கள் மீதான ஒடுக்குமுறை, தாமிரபரணி படுகொலை போன்ற மோசமான அடக்குமுறைகள், குடும்ப அரசியல், ஊழல் குற்றச்சாட்டுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஒன்றிய அரசின் ஆட்சிக் கலைப்பால் அதிகாரத்தை இழந்த திமுக, ஜனநாயக விரோதமாக ஒன்றிய ஆட்சியை வலியுறுத்தி எம்ஜிஆர் ஆட்சியைக் கலைக்கச் செய்தது.

### வலது திசையில் அதிமுக

திமுக எதிர்ப்பில் உருவான அதிமுக, எம்ஜிஆர் தலைமையிலும் பின்னர் ஜெயலலிதா தலைமையிலும் பிறகு எடப்பாடி தலைமையிலும் திமுக எதிர்ப்பையே தனது கொள்கையாக கொண்டிருந்தது. வெற்றியும் பெற்றது. எம்ஜிஆர் ஆட்சியில் மிக மோசமான ஜனநாயக ஒடுக்குமுறை, ஜெயலலிதா ஆட்சியில் கொடியங்குளம் கொடூரம், கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பு போராட்டத்தின் மீது அடக்குமுறை, அரசு ஊழியர்கள் மீது நடத்தப்பட்ட வரலாறு காணாத தாக்குதல், பரமக்குடி துப்பாக்கிச்சூடு, எடப்பாடி ஆட்சியில் தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு முதலியவற்றை

இந்த தலைவர்கள் ஆட்சிகாலத்தின் மக்கள் விரோதத் தன்மையை அடையாளப்படுத்தலாம். அதிமுக ஆட்சிக் காலங்கள் பெரிதும் மக்கள் விரோத கொள்கைகளால் அறியப்பட்டன. ஆனாலும் அதிமுகவை திராவிடக் கட்சியாக முன்னிறுத்திக்கொள்ள இடஒதுக்கீடு, இரு மொழிக்கொள்கையை இக்கட்சி தொடர்ந்தது, தொடர்கிறது. தமிழ்நாட்டுக்கு 69% இட ஒதுக்கீட்டை அரசமைப்புசட்ட ரீதியாக உறுதிசெய்ததில் ஜெ. ஆட்சிக்கு முதன்மைப்பங்குண்டு. அதிமுக சமூகநீதி அடையாளத்தை அணிந்து கொள்வதற்கு இது உதவியது. திமுகவை ஆட்சி அதிகாரத்திலிருந்து தள்ளிவைக்க, இலவச பற்பொடி உள்ளிட்ட மக்கள்மயக்கு திட்டங்களையும் கூட மேற்கொண்டது. ஆனாலும் வரலாற்று மரபான திராவிட கருத்தியல், அரசியல் கொள்கைகளிலிருந்து வலது திசையில் விலகிய அதிமுக, எம்ஜிஆர் காலத்தில் ஆரம்பித்து ஜெயலலிதா காலத்தில் உச்சம் தொட்டது. இன்றுவரையிலும் தொடர்கிறது. கட்சியில் பிளவுகள், தொடர் தோல்விகள், பாஜகவோடு சேர்ந்து பயணித்ததால் ஏற்பட்ட மதிப்பிழப்பு இவற்றால் அது கடும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. நூற்றாண்டுகளுக்கான கட்சி என்று மார்தட்டிக் கொண்டாலும் அரசியல் களத்தில் ஒரு கட்சியாக எந்த அளவு தாக்குப்பிடிக்கும் என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

**திராவிட வானில் புதிய நட்சத்திரங்கள்**

திமுக, அதிமுகவின் தவறான கொள்கைகள், ஆட்சிமுறைகளாலும் புறக்க ணிக்கப்பட்ட சமூக சக்திகள், புதிய புதிய சமூக இயக்கங்களாக, அரசியல் கட்சிகளாக தோன்றி வருகின்றன. திராவிட அரசியலை நிராகரிக்கும் இந்த அரசியல் நட்சத்திரங்கள் திராவிட பாணியிலேயே தோன்றி வருகின்றன. அதனாலேயே சில மங்கி வருகின்றன. சில மறைந்து வருகின்றன. (அந்த வரிசையில் தமிழக வெற்றிக் கழகமும் வந்துள்ளது). இந்த மாற்றங்கள் பல துருவ அரசியலுக்கு வழியேற்படுத்திக் கொடுத்தன. ஆனாலும் இவை திமுக, அதிமுகவுடன் கூட்டணி காண்பதை விதியாகவே மாற்றிவிட்டன. கூட்டணி அரசியல் என்ற பேரால், இருமுகாம் அரசியலுக்கே வழியேற்படுத்திக் கொடுத்துள்ளன. தேர்தலில் கூட்டணி, ஒரு கட்சி ஆட்சி என வெற்றிகரமான வாய்ப்பாட்டை திமுக, அதிமுக கட்சிகள் ஏற்படுத்தி தங்கள் ஆதிக்கத்தை தக்க வைத்துக் கொண்டன.

**பாஜக முயற்சியும் கூட்டணி ஆட்சிக்கான உரத்த குரலும்!?**

2026 க்கான தேர்தல் வேலைகளை கட்சிகள் இப்போதே துவங்கி விட்டன. திமுக 200 தொகுதிகளில் வெற்றி என பேசிவருகிறது. திமுக கூட்டணியில் விரிசல், அதிமுக தலைமையில் மெகா கூட்டணி என அதிமுக பேசிவருகிறது. தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்தாக வேண்டும் என்ற நெருக்கடியில் திமுகவும், தொடர் தோல்விகளிலிருந்து தப்பிப்பிழைத்தாக வேண்டிய நெருக்கடியில் அதிமுகவும் உள்ளன. மக்களவைத் தேர்தலில் பெற்ற வாக்குகளால் ஊக்கம் பெற்றுள்ள பாஜக, பலவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அவற்றுள் ஒன்று, கூட்டணி ஆட்சி. மத்தியில் கூட்டாட்சி கேட்கும் இக்கட்சிகள் மாநிலத்தில் தனிஆட்சியை மட்டும் நடத்துவது ஏன்? ஏன் மாநிலத்தில் கூட்டாட்சி நடத்த கூடாது? என்று கேட்டு வருகின்றனர். இது குறித்து பாஜக ஆதரவு பத்திரிகையாளர்கள் தொடர்ந்து எழுதி வருகின்றனர். மக்களின் வாக்குகளை பகிர்ந்து கொள்ளும் கட்சிகள் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வது தவறில்லை. ஆனால், பாஜகவின் குறைந்தபட்ச திட்டம் திமுக கூட்டணியில் மாற்றத்தைக் கொண்டு வருவது, அதிகபட்ச திட்டம், பாஜக திட்டத்துக்கு ஆதரவான ஒரு கூட்டணியை கொண்டுவருவது என்பதாகும். சாம்சங் போராட்டத்தை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவந்ததற்காக முதலமைச்சருக்கு பாராட்டு தெரிவிக்கும் விதமாக கூட்டணிகட்சித் தலைவர்கள் ஸ்டாலினை சந்தித்துள்ளனர். இது கூட்டணி உரசலை சரிசெய்யும் முயற்சியாகவும் அதிமுகவுக்கு பதில் சொல்லும் நடவடிக்கை யாகவும் காணலாம்.

75 ஆண்டுகால திராவிட அரசியல் பெரும் சவால்களை எதிர்கொள்கிறது. ஒன்றிய ஆட்சி அதிகாரத்தில் பாஜக தொடர்வதும் அகில இந்திய அளவிலான பாஜக பெரும் அச்சுறுத்தலாக இருப்பதும் 75 ஆண்டுகால திராவிட அரசியலுக்கு சவாலாகவே இருக்கிறது. பாஜக எதிர்ப்பு அரசியல் சக்தி, வலுவான கூட்டணி என திமுக இருந்தாலும் மக்கள் விரோத கார்ப்பரேட் செல்வாக்கிலிருந்து வெளியே வரவேண்டியுள்ளது, ஜனநாயக அரசியலுக்கு கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதிமுக, தன்னை காப்பாற்றிக் கொள்ளும் நெருக்கடியில் பாஜகவுக்கு வாய்ப்பளிக்கும் உத்தியை மேற்கொண்டு மேலும் நெருக்கடியை எதிர்கொள்ளுமா என்பது இந்த தேர்தலில் முக்கிய காட்சியாக இருக்கும்.

அந்த வகையில் 2026 தேர்தல் முற்றிலும் புதிய களமாக இருக்கும். ❐



# பீகாரை மாற்றுவோம்! நீதிக்கான பேரணி- பொதுக் கருத்தரங்கம்

பீகாரை மாற்றுவோம்! நீதியை நிலை நாட்டுவோம் என்ற முழக்கத்துடன் பீகாரின் பல்வேறு முனைகளில் இருந்து ஒரே நேரத்தில் நடைபயணங்களும் மக்கள் பேரணிகளும் அக்டோபர் 16 முதல் 26 வரை நடைபெற்றன. இகக(மாலெ) கட்சி தலைமையில் துடிப்பு மிக்க அளவில் பெரும் மக்கள் பங்களிப்புடன் நடந்த இந்த பயணங்கள் எப்போது நினைவுகூரக் கூடிய ஒன்றாகும். மிகக் குறுகிய காலத்தில் முடிவு செய்யப்பட்டு, பத்தே நாட்களில் ஏற்பாடு செய்யப்பட்டு, பீகாரில் மொத்தமுள்ள 38 மாவட்டங்களில் 30 மாவட்டங்களில் கிட்டத்தட்ட 24 பேரணிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. இந்தப் பயணங்களில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், இகக(மாலெ) நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்வேறு கட்சிக்குழுக்களின் உறுப்பினர்கள் உள்பட சுமார் 5,000 தோழர்கள் சுமார் 3000 கிலோமீட்டர்கள் மாநில, மாவட்ட, தேசிய நெடுஞ்சாலைகள் வழியாகச் சென்றனர். கடைசி நாளில் பீகாரின் வரலாற்றுச் சிறப்புமிக்க மில்லர் பள்ளிக்கூட மைதானத்தில் மாபெரும் பொதுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்த பயணங்களின்போது குறைந்த பட்சம் 1000 பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 10,000த்திற்கும் மேற்பட்ட மக்கள் அவற்றில் பங்கெடுத்துள்ளார்கள். பகட்டான ரோடு ஷோக்களும் பணத்தைக் கொண்டு நடக்கும் அரசியலும் உள்ள இன்றைய சூழ்நிலையில், மக்களுடைய அரசியல், மக்களுக்கான அரசியல், மக்களால் அரசியல் என்கிற அடிப்படையில் உழைப்பை- உழைக்கும் மக்களை மையமாகக் கொண்டு முன்மாதிரியாக நடத்தப்பட்டதுதான் இந்த மக்கள் பயணம்-பேரணியாகும். இந்தப் பிரச்சாரப் பயணம் வெற்றிகரமானது மட்டுமின்றி பல்வேறு மக்கள் பிரிவினர் குறிப்பாக பாதிப்புக்குள்ளாகியுள்ள, உரிமை பறிக்கப்பட்ட மக்கள் - நிலம் கணக்கெடுப்பு என்ற பெயரில் அப்புறப்படுத்தப்படும் அச்சத்திலிருக்கும் நிலமற்ற ஏழைக் குடும்பத்தினர், பிரி-பெய்ட் மீட்டர் மற்றும் அதிகமான மின் கட்டணம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள அன்றாடங்காய்ச்சியினர், நிலபிரபுத்துவ, மதவெறி வன்முறையால் தாக்குதலுக்குள்ளாகும் தலித்துகள் மற்றும் சிறுபான்மையினர், அடிப்படை உரிமைக்காகவும் வாழ்க்கைக் கூலிக்காகவும் போராடிக் கொண்டிருக்கும் திட்டத் தொழிலாளப் பெண்கள், பீகாரிலுள்ள பள்ளிக்கூடங்களின் நிலை பற்றி அக்கறையுள்ள இளம் மாணவர்கள்- கோரிக்கைகளை முன்னெடுத்துச் சென்றது.

'எங்கள் பங்கைக் கொடுத்திடு- உங்கள் சொல்லைக் காப்பாற்று' என்பதே பயணத்தின் முக்கிய முழக்கமாகும். மாதம் ரூ.6000த்திற்கும் குறைவான வருமானம் உள்ள 95 லட்சம் ஏழைக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.2 லட்சம் நிதியுதவி, நிலமற்ற ஏழைக் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 5 சென்ட் நிலம், அனைவருக்கும் வசதியான வீடு ஆகியவையே பயணத்தின் பிரதான கோரிக்கைகளாக இருந்தன. இவைகள் நிச்சயமாகத் தரப்படும் என்று இரட்டை எஞ்சின் டெல்லியில் நரேந்திரமோடியும் பாட்னாவில் நிதிஷ்குமாரும் திரும்பத் திரும்ப வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், பல லட்சக்கணக்கான பீகார் ஏழைகளும் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றாததைக் கண்டித்து நூற்றுக்கணக்கான ஒன்றியங்களில் ஆகஸ்ட்-செப்டம்பர் மாதத்தில் மட்டும் லட்சக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல், அந்த ஏழை மக்கள் மீது மேலும் இடியை இறக்குகிறது நிதிஷ்குமார் அரசாங்கம். ஒன்று, நிலப்பிரபுத்துவம் ஒழிப்பு காலத்தில் இருந்தே நிலப் போராட்டத்தின் மூலம் பெற்று பல பத்தாண்டுகளாக அனுபவித்து வரும் கொஞ்சநஞ்ச ஆதாரங்களையும் 'நிலக் கணக்கெடுப்பு' என்ற பெயரில் நிலமற்ற ஏழைகளிடமிருந்து பிடுங்கி, நில வங்கி மூலமாக கார்ப்பரேட்டுகளுக்கு வழங்கத்திட்டமிட்டுள்ளது நிதிஷ் அரசு. மற்றொன்று, குறைந்த வருமானத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழைகளிடமிருந்து, மின் பயன்பாட்டிற்கு முன் கட்டணம் மீட்டர்

பொருத்தி கொள்ளையடிப்பது மட்டுமின்றி அவர்களின் மின்சாரப் பயன்பாட்டு உரிமையையே பறிக்கிறது. ஏழை மக்கள் வசமுள்ள நிலங்களை முறைப்படுத்தி அவர்களுக்கு வழங்கும் வரை நிலக் கணக்கெடுப்பு நிறுத்தி வைக்கப்பட வேண்டும், நிலமற்ற ஏழைகளுக்கு 5 சென்ட் நிலம் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும், மின் பயன்பாட்டிற்கு முன் கட்டண மீட்டர் திட்டம் கைவிடப் படவேண்டும், பீகாரின் விவசாயிகள் மற்றும் ஏழை குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் மாதம் 200 யுனிட் இலவச மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்பன பயணக் கோரிக்கைகளில் மிக முக்கிமானவையாகும்.

அரசியல் மாற்றத்திற்கான கட்டத்தில் பீகார் இருக்கிறது. நிதிஷ்குமார், லல்லு பிரசாத், ராம் விலாஸ் பஸ்வான், சுஷில் மோடி காலத்தின் தலைமுறையில் இருந்து புதிய தலைமையை நோக்கி பீகாரின் அரசியல் சூழல் மாறி வருகிறது. கடந்த 20 ஆண்டுகளாக பின்னால் இருந்து பீகாரில் ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற பாஜக, இப்பொழுது ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் வெற்றிடத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, பக்கத்து மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் யோகியின் புல்டோசர் ராஜ் நடப்பதுபோல் பீகாரிலும் அப்படியொரு ஆட்சியை தான் நடத்துவதற்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. கிழக்கு பீகார் மாவட்டங்களில், முஸ்லீம் வெறுப்பை விதைத்து வன்முறையைத் தூண்டி, அரசமைப்புச் சட்டத்தை அப்பட்டமாக கேலிக்குள்ளாக்கி நடத்தப்பட்ட கிரிராஜ் ஹிந்து சுயமரியாதைப் பயணத்திற்கு பதிலடி கொடுக்கும் விதமாக ‘பீகாரை மாற்றுவோம் நீதி கேட்டு பயணம்’ இருந்தது என்பது தற்செயலானது அல்ல. இளைய பீகாரின் கோரிக்கையான அதிகமான, தரமான பள்ளிகளுக்கு, கிரிராஜின் பதில் திரிசூலங்களை வழங்குதாகவே இருந்தது. எதிர்கால பீகாருக்கு இரண்டு பயணங்களும் இரண்டு வெவ்வேறு பார்வையை முன்நிறுத்துகின்றன.

பீகாரை மாற்றுவோம் என்பது வெறும் ஆட்சி மாற்றமோ அல்லது தலைமை மாற்றமோ அல்ல. பிரசாந்த் கிஷோர் அல்ல பாஜகவே சொல்வதுபோல், சில போலி நவீன தோற்றத்துடன் பழைய நிலபிரபுத்துவ முறையைக் கொண்டு வருவதல்ல. அதற்கு முற்றிலும் மாறானது. நீண்ட காலங்களாக மறுக்கப்பட்டு வரும், மாறி மாறி வந்த அரசாங்கங்களால் வாயாலே வடை சுட்டு ஏமாற்றப்பட்ட மக்களின் அதிகரித்து வரும் அபிலாஷைகளை, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது. பிரபலமான முழக்கமான உணவு, உடை, உறைவிடம் என்பதிலிருந்து, அடிப்படை கட்டமைப்புகளான மின்சாரம், தண்ணீர், சாலைகள் மற்றும் மறுக்கப்பட்டுவரும் கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு என்பதாக மக்களின் தேவைகள் அதிகரித்துள்ளது. மலிவான உழைப்பை ஏற்றுமதி செய்யும் பீகார் போன்ற ஒரு பின்தங்கிய மாநிலத்தை பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை, சமூக ஒடுக்குமுறை, வறுமையின் நுகத்தடியிலிருந்து விடுவிப்பதுதான் உண்மையான மாற்றமாகும்.

பீகார் பெண்கள் நிலை மிகவும் மோசம். மதிய உணவுத் திட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு நாளொன்றுக்கு வெறும் ரூ.55 தான் கொடுக்கப்படுகிறது. ஆண்டுக்கு 10 மாதங்கள் மட்டுமே வேலை. கோவிட் 19 காலத்தில், தங்கள் உயிரைப் பற்றி கவலைப் படாமல் பலருடைய உயிரைக் காப்பாற்றிய பீகாரின் ஆஷா தொழிலாளர்களுக்கு மாத ஊக்கத் தொகையாக ரூ.2500 ஒப்புக் கொண்டபடி நிதிஷ்குமார் அரசு வழங்காமல் புறக்கணித்து வருகிறது. இப்போது சுய உதவிக் குழுக்களில் பல லட்சக்கணக்கான பெண்களை பதிவு செய்வதற்கு முக்கிய பங்காற்றிய ஜீவிகா ஊழியர்களுக்கு கடந்த 20 ஆண்டுகளாக ஆட்சியிலிருக்கும் தேஜகூ அரசு துரோகமிழைத்து வருகின்றது. அதைப் போல பீகாரில் உள்ள தலித்-பகுஜன் சமூகத்தினர் நிலப்பிரபுத்துவ வன்முறையாலும் சமூகரீதியான புறக்கணிப்பாலும் மிகவும் மோசமான நிலையில் உள்ளனர். பீகாரின் இளைஞர்கள் உயர் கல்விக்காகவும் வேலைக்காகவும் மற்ற இடங்களுக்குப் புலம்பெயர்ந்து வருகிறார்கள். கிரிராஜ்சிங்குகளின் வழியில் சென்றால், பீகார் முஸ்லீம்களுக்கு எதிராக வெறுப்பையும் வன்முறையையும் செயல்படுத்தும் ஒரு சோதனைக்கூடமாக மாறும்.

‘எங்கள் பங்கைக் கொடுத்திடு, உங்கள் சொல்லைக் காப்பாற்று’ முழக்கத்துடன் நடைபெற்ற ‘பீகாரை மாற்றுவோம்! நீதிக்கான பேரணி’யானது சமூக மாற்றத்திற்கான நிகழ்ச்சி நிரலையும் முழுமையான நீதியையும் முன்னுக்குக் கொண்டு வந்துள்ளது. பீகாரின் ஏழைகள், பெண்கள், இளைஞர்களின் கூட்டு அறுதியிடலின் திறன் பற்றிய பார்வையை இந்தப் பயணம் நமக்குத் தந்துள்ளது. இது பீகாரை மாற்றுவதற்கு ஒரு நீடித்த மக்கள் இயக்கத்திற்கான தெளிவான அழைப்பாக இப் பேரணி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பீகாரில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வெற்றிடத்தை, அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமான சக்திகள் மற்றும் பிற்போக்குக் கருத்துகள் பயன்படுத்திக் கொண்டு பீகாரை பின்னுக்குத் தள்ள அனுமதிக்கக் கூடாது. பீகாரின் துடிப்பான கம்யூனிஸ்ட்டு மற்றும் சோசலிஸ்டு பாரம்பரியத்தின் வாரிசுகள் தலைமையேற்று முன்னோக்கிய பாதையை அமைத்து, ஒரு கௌரவமான வாழ்க்கை, எல்லாருக்கும் உரிமைகள் மற்றும் நீதி, சமூக சமத்துவம் மற்றம் சமூக நல்லிணக்கத்திற்கான பதாகையை உயர்த்திப் பிடித்து பீகாரை முன்னேற்ற வேண்டும். ❐

# ‘ஜனநாயகத்தால்’ தியாகியாக்கப்பட்ட ஜனநாயகவாதி சாய்பாபா



அக்டோபர் 12, 2024 அன்று மாலை 8.36 க்கு பேராசிரியர் ஜி. என். சாய்பாபா தனது இறுதி மூச்சை சுவாசித்த அவரது இதயம் செயலற்று நின்று போனது. மருத்துவர்கள் அவரைக் காப்பாற்ற மிகவும் தீவிரமாக முயற்சித்தனர். ஆனால், அவர்களால் அது முடியவில்லை. அவருக்கு 57 வயதுதான். பித்தப்பை கற்களை நீக்கிய பிறகு ஏற்பட்ட சிக்கல்களால் அவர் இறக்க நேரிட்டது. இந்தச் சிகிச்சை முறை உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதல்ல. ஆனால், சாய்பாபா சாதாரண சூழ்நிலைமைகளில் அறுவை சிகிச்சை அரங்கத்திற்குள் நுழைந்திருக்கவில்லை.

90% செயல்படாத சாய்பாபாவின் உடல் பத்தாண்டு கால அநீதியான சிறைவாசம், சித்திரவதை, மோசமான துன்புறுத்தல் காரணமாக மிகவும் பலவீனமடைந்திருந்தது. சக அரசியல் கைதிகளான அருட்தந்தை ஸ்டேன் சுவாமி, பாண்டு நரோதே, ஜியா லால் சிறையிலேயே மரணமடைந்தார்கள். சாய்பாபா சிறையில் இறக்கவில்லை என்றபோதிலும் சிறைவாசத்தின் கொடுமைகள் அவருடைய இறப்பை வேகப்படுத்தின என்பதில் சந்தேகமே இல்லை. குற்றவியல் நீதிமுறை அவரது உடலை கொடூரமாக சிதைக்க எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்ற விவரங்களுக்குள் நுழைவதற்கு முன்னர், அவரது செயலற்ற உடலுக்குள் இருந்த மனசைக் கண்டு அரசு எந்தளவுக்கு அச்சமடைந்தது என்பதைத்தான் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஐந்து பேருடன் சேர்த்து, டெல்லி பல்கலைக்கழக மேனாள் பேராசிரியரான சாய்பாபாவும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் 1967இன் பிரிவு 18 உடன் 2014 இன் பிற குற்றவியல் சட்ட விதிகளின் கீழ் “அரசாங்கத்திற்கு எதிராக போர் தொடுக்க சதி செய்ததாக கைது செய்யப்பட்டார். அவர் மாவோயிஸ்டுகளுடன் தொடர்பில் இருந்தார் என்று அடிக்கடி சொல்லப்பட்டது. பசுமை வேட்டை மற்றும் அதுபோன்ற அரசின் நடவடிக்கைகளை வெளிப்படையாக எதிர்த்தது, அரசின் அடக்கு முறைக்குள்ளான தலித்துகள், பழங்குடியினர், இந்தியாவுக்குள் இருக்கும் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் ஆகியோருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தது ஆகியவைதான் சாய்பாபா செய்த “குற்றம்”.

2014இல் பாரதிய ஜனதா கட்சி(பாஜக) ஆட்சியைப் பிடித்ததிலிருந்து மனித உரிமை செயல்பாட்டாளர்கள் முதல் வழக்கறிஞர்கள் வரை, பத்திரிக்கையாளர்கள் முதல் மாணவர்கள் வரையிலும் ஜனநாயக, முற்போக்கு உரிமைகளுக்காகப் போராட குரல் கொடுப்பவர்கள் துன்புறுத்தப்படுவது வேகமாக அதிகரித்து விட்டது. 2018 இல் பீமா கொரேகானில் ஆரம்பித்து, 2020 இல் சிஏஏவுக்கு எதிரான போராட்டங்கள் முதல் செயல்பாட்டாளர் டீஸ்டா செதால்வத், பத்திரிக்கையாளர் முகமத் சுபைர் வரை கைதுகள் தொடர்ந்தன. அதிகாரத்தில் உள்ளவர்கள் பற்றிய உண்மையை பேசும், அதிகாரப் பலம் படைத்தவர்களின் பொய்களையும் பித்தலாட்டங்களையும் அம்பலப்படுத்தும் எவரையும் சிறைக்குள் தள்ளுவதையே குறியாகக் கொண்டுள்ளது தற்போதைய ஆட்சி. கொடூரமான உபா சட்டம் 1967ன் கீழ், பிணை அரிதானது, சிறையே விதியாகும். எதிர்ப்புக் குரல்களை தந்திரமாக நசுக்குவதற்கு மிகவும் வசதியான சட்டம் இது. அதற்காக “மாவோயிஸ்ட்” முத்திரையும் அடிக்கடி ரொம்பவே பயன்படுத்தப்படுகிறது.

மே 2014இல் பாஜக ஆட்சியைப் பிடிப்பதற்கு கொஞ்சம் முன்பு 2013 இல் பிரசாந்த் ராஹி, ஹேம் மிஸ்ரா ஆகியோர் கைது செய்யப்பட்ட வழக்கோடு தொடர்புள்ளதாக ஜி. என்.சாய்பாபா கைது செய்யப்பட்டார். இந்த கைதுகள் பாஜகவின் எழுச்சிக்கு முந்தைய ஆண்டுகளில் ஊர்ந்து வந்த எதேச்சதிகாரத்தின் அடையாளமாகவே இருந்தது. அது இந்துத்வாவின் எழுச்சியை முன்னாடியே அறித்தது மட்டுமின்றி எளிதாக்கியது.

1967 லிருந்து உபா சட்டம் அமலில் இருந்து கொண்டிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் 2004 இல்தான், உபா திருத்தச் சட்டம் 2004 இன் மூலம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு தண்டனை வழங்குவதற்காகவென்று ஒரு அத்தியாயத்தை நாடாளுமன்றம் சேர்த்தது. இந்தச் சட்டம் 2004 இல் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ்

தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டது. 2004, 2008, 2013 ஆகிய ஆண்டுகளில் கணிசமான திருத்தங்களைச் செய்து இந்தச் சட்டம் மேலும் கொடூரமானதாக மாற்றப்பட்டது.

உபா சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்ட உடனேயே ஜி என். சாய்பாபாவின் உடலும் மனதும் குற்றவியல் நீதிமுறையின் முழு பலத்தையும் எதிர்கொண்டன. எவ்வளவு முடியுமோ அவ்வளவு காலத்திற்கு, எவ்வளவு முடியுமோ அவ்வளவு கொடூர நிலையில் அவரை சிறைக்குள் வைத்திருக்க அரசு எல்லா வேலைகளையும் செய்தது.

கட்சிரோலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் ஒரு முறை அல்ல, இரண்டு முறை (2017மற்றும் 2022) சாய்பாபாவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அமர்வு நீதிமன்றத்தின் நடைமுறைத் தவறுகளின் காரணமாக 2022இல் பாம்பே உயர்நீதிமன்றத்தால் அவர் விடுவிக்கப்பட்டார். அதனால் அரசின் திட்டங்கள் தவிடுபொடியானவுடன் அரசு தனது கொடிய விஷப்பற்களை முழுமையாக வெளிக்காட்டியது. தனது ஜனநாயக பாசாங்கை ஒதுக்கித் தள்ளிவிட்டு அவரை சிறை கம்பிகளுக்கு பின்னால் தொடர்ந்து வைத்திருக்க தீவிரமாக முயற்சித்தது.

2022 இல் பாம்பே உயர்நீதிமன்றத்தின் இருவர் அமர்வால் அவர் விடுவிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குள்ளேயே மகாராஷ்டிரா அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தில், அந்த உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக ஒரு மனுவை தாக்கல் செய்தது. அதனை தொடர்ந்து அவசரத்தின் அலங்கோலங்கள் அரங்கேறின.

அரசுத் தலைமை வழக்குரைஞர் துஷார் மேத்தா முதலில் தலைமை நீதிபதி யுயு லலித் அமர்வில் இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்க வைக்க முயற்சித்தார். ஆனால் அன்றைய நாளுக்கான விசாரணைகளை ஏற்கனவே நீதிமன்றம் முடித்து விட்டிருந்தது. அதன்பிறகு மேத்தா நீதிபதி டி ஒய் சந்திர சூட் அமர்வை அணுகினார். இங்கும் கூட உயர் நீதிமன்றத்தின் ஆணையை நிறுத்தி வைப்பதற்கான வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. ஆனால் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் விரைவான விசாரணைக்காக விண்ணப்பிக்க அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதேவேளை இவ் வழக்கு திங்கள் கிழமையன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் ஆனால் திங்களன்று வழக்கு விசாரிக்கப்படும் என்பதற்காக விடுதலை செய்து உத்தரவிட்டதை நிறுத்தி வைக்க முடியாது என வெளிப்படையாகவே கூறிவிட்டது.

ஆனால் வழக்கத்திற்கு மாறாக திடீர் திருப்பமாக உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி லலித்தால் நீதிபதிகள் பேலா திரிவேதி, எம்ஆர்ஷா ஆகியோர் தலைமையில் சனிக்கிழமையன்று ஒரு சிறப்பு விசாரணைக்கு அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சிறப்பு அமர்வு, உயர் நீதிமன்றம் நடைமுறை தவறுகளின் மீது மட்டுமே கவனம் குவித்துள்ளதேயொழிய வழக்கின் தன்மையைக் கண்டுகொள்ளாமல் விட்டுள்ளது ஆகவே வழக்கின் தன்மை தகுதிகளின் அடிப்படையில் உயர்நீதிமன்றத்தின் ஒரு புதிய அமர்வு வழக்கை விசாரிக்க வேண்டும் என உத்தரவிட்டது. உச்ச நீதிமன்ற சிறப்பு அமர்வு, ஒருவர் பயங்கரவாதக் குற்றங்களில் ஈடுபடுவதற்கு அவரின் மூளையானது மிக முக்கியமான ஒருங்கிணைப்புப் பகுதியாகும் என கருத்தும் கூறியது. பேராசிரியர் சாய்பாபா போன்ற ஒரு மாற்றுத் திறனாளி மூத்த குடிமகனை வெறுமனே வீட்டுக் காவலில் வைப்பது போதுமானதாக இருக்காது என்று அவரை மீண்டும் சிறைக்கு அனுப்பி வைத்தார்கள்.

உச்ச நீதிமன்றத்தின் துரதிஷ்டவசமான இந்த வார்த்தைகள் மாற்றுக் கருத்து கொண்டவர்கள் மீது அரசால் நடத்தப்படும் அரசியல் துன்புறுத்தலுக்கு பின்னுள்ள உண்மையை அப்படியே வெளிச்சம் போட்டுக் காட்டியது. ஜனநாயக, மனிதாபிமான, நீதிக்கான சமூக ஒழுங்கு ஆகியவற்றை விதைக்கக் கூடிய கருத்துகள் அரசுக்கு ஆபத்தை விளைவிப்பவையாகும். அதனால் எழுதுவது, பேசுவது, பயணிப்பது அல்லது சில நேரங்களில் வெறுமனே இருப்பதன் வாயிலாக அத்தகைய கருத்துகளை நடைமுறைக்கு கொண்டு வரும் உடல், முழுவதுமாக செயலாற்றதாக்கப்பட வேண்டுமாம். சாய்பாபா போன்ற, மாற்றுக் கருத்து சிந்தனைகளை கொண்டிருப்பவர்களின் உடல் பத்து சதவீதம்கூட செயல்படும் திறனைக் கொண்டிருப்பதற்கு அனுமதியில்லை.

அவர் இறுதியாக மார்ச் 2024 அன்று விடுதலை செய்யப்பட்டார். பாம்பே உயர்நீதிமன்றத்தின் நாக்பூர் அமர்வு, முட்டாள்தனமான சாட்சிகள், அரசுத் தரப்பு விசாரணை முறையாக நடத்தப்படவில்லை என்று கூறி ஜி என் சாய்பாபாவையும் மற்ற ஐவரையும் ( அதில் ஒருவர் சிறையில் பன்றிக்காய்ச்சலால் இறந்து விட்டார்) மீண்டும் ஒருமுறை விடுதலை செய்தது. அவருடைய விடுதலையை நிறுத்தி வைக்க அரசு மீண்டும் முயற்சித்தது ஆனால் இம்முறை வெற்றி பெறமுடியவில்லை.

சாய்பாபாவின் உடலை அழிக்கும் செயலானது மெதுவாக அதேவேளை நிலைக்கக்கூடியதாக நடத்தப்பட்டது. சிறைக் கொடுமையினால் அவர் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தார். அதனால் அவர் கடந்த சில ஆண்டுகளில் நாக்பூர் அரசு மருத்துவமனைக்கு பல தடவைகள் சிகிச்சைக்காக அழைத்துச்

செல்லப்பட்டார். அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என மருத்துவர்களும் கூட வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் அந்த வேண்டுகோள்கள் கண்டு கொள்ளப்படவில்லை. ஆகஸ்ட் 2022-ல் அவர் தொடர்ந்து கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். அதனால் அவர் கோவிட் தொற்றால் எளிதாக பாதிக்கப்படக் கூடியவராக இருந்தார். கோவிட் அவரது உடல்நலத்தை எதிர்மறையாகப் பாதித்தது. அவருக்கு தொடர்ந்து சளி பிடித்தது, காய்ச்சல் வந்தது. அவர் திடீரென மயங்கிடுவார், உணர்வற்று விழுந்திடுவார்.

அவரின் முடக்குவாத நோய் மோசமடைந்ததால் சிறை மருத்துவர்கள் அவரை டெல்லி ஏஐஐஎம்எஸ்-க்கு கொண்டு செல்லுமாறு வாய்மொழியாக யோசனை கூறினர். அப்போதும் கூட அவரது குடும்பத்திற்கு எழுத்துபூர்வமான அறிக்கைகள் எதுவும் கொடுக்கப்படவில்லை. அவருக்கு மருத்துவ சிகிச்சைகொடுக்கப்படுவதற்கு மாறாக, அவப்புகழ் பெற்ற "முட்டை தனிமைச்சிறை" (அண்டா செல்) -யில் அடைத்து வைத்தனர். அது உயரமான சுவர்களைக் கொண்டது. அதன் கூரைக்கு அருகில் முட்டை வடிவத்தில் ஜன்னல். அது வழியாக இரத்தத்தை உறைய வைக்கும் வகையில் குளிர்காற்று இரவில் வீசும். 2020 இல் உயர்நீதிமன்றம் அவருக்கு அவசரகால பிணை வழங்க மறுத்துவிட்டது. அவரது அம்மா இறக்கும் தருவாயில் கடைசி நேரத்தில் அவரை காணொளி வாயிலாகப் பார்க்கக் கூட நாக்பூர் சிறை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. சாய்பாபா விடுதலை செய்யப்பட்ட அந்த நேரத்தில் அவருடைய உடல் சிறிய நோய்களுக்குக் கூட கடும் பாதிப்படையக் கூடியதாக மாறிவிட்டிருந்தது. அது அவரது இறப்பை விரைவாக்கியது.

எந்த ஒரு அரசாங்கமும் மாற்றுக் கருத்தை ஒடுக்குவதற்காக குற்றவியல் நீதி முறையைத் தவறாக பயன்படுத்துவதை நிறுத்திட, விரைவில் பிணை கிடைப்பதற்கு, அனைத்து அரசியல் கைதிகளின் வழக்குகளையும் விரைவாக விசாரிக்க, அனைவருக்குமான நீதியை ஒழித்துக் கட்ட விரும்பும் அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பை வலுப்படுத்துவது ஒரு ஜனநாயக நாட்டில் உபா போன்ற சட்டங்களின் தேவையைக் கேள்விக்குட்படுத்த வேண்டிய அவசியத்திற்கு பேராசிரியர் ஜிஎன் சாய்பாபாவின் தியாகம் மீண்டும் அழுத்தம் கொடுக்கிறது. தண்டனைக்கான நடைமுறையைக் கொண்டுள்ள நீதிமுறை எப்படி நியாயமானதாக இருக்கமுடியும்? அரசியல் காழ்ப்புணர்ச்சியால் போடப்பட்ட வழக்கில் நீண்ட காலத்திற்குப் பின்னர் ஒருவர் விடுவிக்கப்பட்டார் என்றாலும் கூட, அரசமைப்பு சட்ட, ஜனநாயக மதிப்பீடுகளில் நீண்ட காலம் என்பது எவ்வளவு நீண்டது? இக் கேள்வி நம் அனைவரையும் தொந்தரவுக்குள்ளாக்க வேண்டும். ❒

## தேனியில் ஆர்ப்பாட்டம்




14.10.2024 அன்று தேனி மாவட்டம், ஆண்டிபட்டி சிபிஐஎம்எல் ஒன்றிய குழு சார்பாக வீட்டுமனை, வீடு, தேசிய ஊரக வேலைத் திட்டத்தில் 200 நாள் வேலை, 600 ரூபாய் கூலி, அடிப்படை வசதிகள் கோரியும், டாஸ்மாக் கடைகளை மூடக் கோரியும் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐஎம்எல் ஆண்டிபட்டி ஒன்றிய அமைப்பாளர் வி.கென்னடி தலைமையேற்றார். ஆண்டிபட்டி ஒன்றிய குழு உறுப்பினர்கள் அழகுமலை, சின்னஅன்னமுத்து, கைலாப், மூக்கையன், சின்ன மாரியம்மாள், சத்யா, பாண்டியம்மாள், ஜெயஈஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து, பொம்மிநாயக்கனூரில் கட்சி கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர் ஜெயஈஸ்வரன் கட்சிக் கொடியை ஏற்றினார். தேனி மாவட்ட சிபிஐஎம்எல் கட்சிப் பொறுப்பாளர் தோழர் மு.இராமச்சந்திரன் உரையாற்றினார். ❒



# நீதிக்கான தேடல்

**கிளிஃப்டன் டி ரொசாரியோ**

கர்நாடகா மாநிலம், கொப்பல் மாவட்டம், மரக்கும்பி கிராமத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு தலித் மக்கள் மீது சாதி ஆதிக்க வெறியர்களால் நடத்தப்பட்ட தாக்குதல் வழக்கில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் கடந்த 21.10.2024 அன்று 101 பேருக்கு தண்டனை வழங்கி உத்தரவிட்டது. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் 98 பேருக்கு ஆயுள் தண்டனையும் 3 பேருக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனையும் வழங்கியுள்ளது. 28.8.2014 அன்று கங்காவதி நகர திரையரங்கத்தில் வைத்து தலித் இளைஞர்களுக்கும் ஆதிக்க சாதி இளைஞர்களுக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. அதற்காக தலித் சமூகத்தினர் வசிக்கும் மரக்கும்பி கிராமத்திற்கு வந்த ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்கள், தலித் பெண்கள் உள்ளிட்ட 36 பேரை கொடூரமாகத் தாக்கி, சாதியைச் சொல்லி திட்டி, அவர்களுடைய வீடுகளை அடித்து நொறுக்கி தீ வைத்துக் கொளுத்தினார்கள்.

கல்யாண கர்நாடகா என்று அழைக்கப்படும் கர்நாடகாவின் வட பகுதியில் கொப்பல் மாவட்டம்உள்ளது. இந்த பின் தங்கிய மாவட்டத்துடன் மற்ற பின் தங்கிய மாவட்டமான பீதர், யாத்கிர், ரெய்சூர். கலபுர்கி, பல்லாரி, விஜயநகரம் போன்ற மாவட்டங்களும் உள்ளன. இப் பகுதிகள் மனித வளர்ச்சிக் குறியீடுகளில், சமூக பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய, உரிமைகள் மறுக்கப்பட்ட பகுதிகள் என நஞ்சுண்டப்பா கமிட்டியால் அறிவிப்பு செய்யப்பட்டவையாகும். 2021ஆம்ஆண்டு அரசமைப்புச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 371 ஜே சரத்துப்படி சிறப்பு அந்தஸ்து பெறும் பகுதிகளாகும். அதன் மூலம் இந்த கல்யாண கர்நாடகா பகுதியில் வேலை வாய்ப்பில், கல்வியில், இடஒதுக்கீட்டில் சிறப்பு கவனம் குவிக்கப்பட்டது என்றாலும் கூட அப்பகுதியில் வசிக்கும் தலித் மக்களின் நிலைமை சமூக, பொருளாதார ரீதியில் மிக மிக மோசமாக இருக்கின்றது.

சாதிய ஒடுக்குமுறைக்கு, சாதி ரீதியான பிளவுகளுக்கு மிகவும் பெயர் பெற்றது இந்த கொப்பல் மாவட்டம். தலித் மக்கள் கிராமங்களில் மையப் பகுதியை விட்டு ஒதுக்குப்புறமான இடத்தில் வாழ்கிறார்கள். அவர்கள் வாழும் பகுதி 'கேரி' என அழைக்கப்படுகிறது. அந்தப் பகுதியைத் தாண்டி அவர்கள் ஊருக்குள் வரக்கூடாது. தலித் மக்கள் உணவகங்களுக்குள் கூட அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களுக்கென தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. தலித் மக்கள் தண்ணீர் குடிக்க இரட்டைக் குவளை, காப்பி, டீ குடிக்க பிளாஸ்டிக் டம்ளர், கோவில்களில் நுழைவதற்குத் தடை, வெளியே நின்றுதான் சாமி கும்பிட வேண்டும், அதுவும் ஆதிக்க சாதியினர் அனுமதித்தால் மட்டுமே. ஆதிக்க சாதியினர் வீட்டிற்குள் தலித் மக்களுக்கு அனுமதி கிடையாது. சில ஆதிக்க சாதியினரை தலித்கள் தொடக் கூடாது. இதுதான் அன்றாட நடைமுறை. இந்த ஆதிக்க சாதி ஒழுங்குக்கு எதிராகச் செயல்பட்டால் தண்டிக்கப்படுவார்கள். சமூக விலக்கம் செய்யப்படுவார்கள். மரக்கும்பியும் இந்த சாதிய சட்டத்திற்கு விதிவிலக்கல்ல.

இடதுசாரி மற்றும் தலித் அமைப்புகளால் அரசியல் உணர்வு, கல்வி கிடைக்கப்பட்ட இளைஞர்கள் இந்த ஆதிக்க சாதி ஒழுங்குமுறையை கேள்வி கேட்க

ஆரம்பித்தார்கள். அதற்கு ஆதிக்க சாதியினர் பதில் சொல்ல முடியாமல், தலித் மக்கள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கினர். அப்படித்தான் மிகக் கொடூரமான தாக்குதலை மரக்கும்பியில் ஆதிக்க சாதியினர் 2014 ஆகஸ்டு 28 அன்று நடத்தினார்கள். அந்த கொடூரத் தாக்குதலுக்கு எதிராக, அச்சுறுத்தல்கள், அச்சம் எல்லாம் இருந்தபோதும், அந்த கிராமத்தின் தலித் மக்கள் ஒட்டுமொத்தமாக ஒற்றுமையுடன் நின்று வழக்கு பதிய வைத்து நீதிமன்றத்திலும் வழக்கை நடத்தினார்கள்.

இந்தத் தீர்ப்பில் மற்றொரு சுவாரஸ்யமும் உண்டு. தீர்ப்பை வழங்கிய அமர்வு நீதிமன்ற நீதிபதி திரு.சி.சந்திரசேகர், நிறவெறி பாகுபாட்டிற்கு எதிராக குரல் கொடுக்கும் புகழ்பெற்ற ஆப்பிரிக்க, அமெரிக்க ஒபரா பாடகர் மரியன் ஆண்டர்சனை மேற்கோள் காட்டி தனது தீர்ப்பைத் தொடங்கியிருந்தார். 1939ல், வாஷிங்டன் அரசமைப்புச் சட்ட அரங்கத்தில், அவருடைய நிறத்தைக் காரணமாகக்காட்டி, மரியன் ஆண்டர்சன் பாடல் நிகழ்ச்சி நடத்துவதற்கு அனுமதிக்கப்படாததைத் தொடர்ந்து லிங்கன் நினைவகத்தில் நடத்திய அவர் நடத்திய தைரியமான, கிளர்ச்சி யூட்டும் நிகழ்ச்சிக்காக அவர் எப்போதும் நினைவுகூரப்படுவார். 1957ஆம் ஆண்டு அவர் இந்தியா வந்திருந்தபோது, புது டெல்லி அகில இந்திய வானொலியில் தாரா அலி பெய்க்கிற்கு அவர் பேட்டி அளித்தபோது சொன்னவற்றைத்தான் நீதிபதி சந்திரசேகர் அவர்கள் தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியிருந்தார். அந்த பேட்டியின் போது தாரா அலி பெய்க், மரியன் ஆண்டர்சனிடம் 1939ல் அவர் லிங்கன் நினைவகத்தில் நடத்திய நிகழ்ச்சி பற்றி குறிப்பிட்டு கேள்வி கேட்டார். அந்த கேள்வி இனப்பாகுபாட்டினைச் சுற்றியே இருந்தது. அதற்கு பதில் அளித்த மரியன் ஆண்டர்சன், "ஒரு நாடு எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அது அதனுடைய பலவீனமான மக்களைக் காட்டிலும் பலமானதல்ல என்பதே உண்மை. ஒருவரை நீங்கள் கீழ் நிலையில் வைத்திருக்கும் வரை, அவர்களை கீழே வைத்திருப்பதற்காக, சிலவற்றில் நீங்களும் கீழ் நிலையிலேதான் இருக்க வேண்டியதிருக்கும். அது வரை நீங்களும் உயர முடியாது" என்று கூறினார்.

அதைதன்னுடைய தீர்ப்பில் நீதிபதி அவர்கள் தற்செயலாகச் சுட்டிக் காட்டியிருந்தாலும், 38 பேருடைய சாட்சியத்தையும் பல்வேறு சான்றாவணங்களையும் நன்றாக ஆழமாக ஆராய்ந்து பார்த்து பாராட்டியுள்ளார். நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், ஆதிக்க சாதி குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான நம்பத்தகுந்த சாட்சியங்கள் என மிகச் சரியாகவே முடிவு செய்துள்ளார். சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் சம்பவத்தில் காயம்பட்டிருந்தார்கள். இது மருத்துவச் சான்றாவணங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 36 தலித்துகளின் காயச் சான்றுகள் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சாதி வெறிக் கும்பல் தாக்கியதில் ஏற்பட்டதுதான் என்பதை மிகத் தெளிவாகவே காட்டுகின்றன.

மேற்படி வழக்கை தொடர்ந்து நடத்தாமல் இருக்க குற்றவாளிகள், தலித் மக்களை மிரட்டுவது, அச்சுறுத்துவது, ஆசை வார்த்தைகள் கூறுவது என பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டார்கள் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. குறிப்பாக, குற்றப்பத்திரிகையில் உள்ள சாட்சிகளைக் குறி வைத்தார்கள். முக்கிய சாட்சியான வீரேஷ் மரக்கும்பி என்பவர் 2015 ஜூலை 10 அன்று படுகொலை செய்யப்பட்டார். அதற்குப் பின்னரும் கூட தலித் மக்கள் எந்தவொரு தூண்டிலுக்கும் அச்சுறுத்தலுக்கும் அடிபணியாமல் சாட்சியமளித்து குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்துள்ளார்கள். கங்காதரய்யா சாமியும்அவரது மனைவி மகந்தம்மாவும் மற்றொரு சாட்சியான தேவராஜ் ஆகிய மூவர் மட்டுமே பிறழ் சாட்சிகளாக மாறினர். அக் கிராமத்தின் ஒடுக்கப்பட்ட மக்களால் நன்கு அறிப்பட்ட கங்காதரய்யா சாமியும்அவரது மனைவி மகந்தம்மாவும் நடந்த வன்முறைச் சம்பவத்தில் தாக்கப்பட்டார்கள் என்பதுதான் விந்தை முரண் ஆகும். இருப்பினும், அவர்கள் ஏதோ காரணத்தால், தூண்டுதலால், அச்சுறுத்தலால் பிறழ் சாட்சியாக மாறிவிட்டார்கள் என்றாலும் அவர்கள் சம்பவத்தில் தாக்கப்பட்டு கங்காவதி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததற்கான ஆதாரங்கள் உள்ளன என்பதே போதுமானது என்று நீதிமன்றம் அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளது. சம்பவத்தில் காயம் படாத போதும் சம்பவத்தைப் பார்த்த மற்ற தலித்துகள் வலிமையாகவும் உறுதியாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். கர்நாடகாவில் மற்ற பிற வழக்குகளில் தண்டனையானது 50 சதவீதம் இருக்கும்போது தலித் மக்கள் தாக்கப்படும் வழக்குகளில் வெறும் 7 சதவீதம் மட்டுமே உள்ள நிலையில், இந்த வழக்கின் தீர்ப்பை வெறுமனே கடந்து போய்விட முடியாது.

தலித் மக்கள் மீதான ஒடுக்குமுறை

வன்முறையானது கொப்பல் மாவட்டத்தில் மட்டுமின்றி. மாநில முழுவதுமே அன்றாட நிகழ்வாக உள்ளது. தேசிய குற்ற ஆவணப் பதிவுகள் படி 2020 ஆண்டு வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கர்நாடகாவில் பதிவான வழக்குகள் 1398 ஆகும். அது 2021ல் 1673, 2022ல் 1977 என அதிகரித்துள்ளன. இவை பதிவான வழக்குகள் மட்டும்தான். அன்றாடம் நடைபெறும் தீண்டாமைக் குற்றங்கள், சாதியப் பாகுபாடு, சாதியாதிக்க வன்முறை குற்றங்கள் பலவும் கண்டு கொள்ளப்படாமலும் வழக்கு பதியப்படாமலும் பதிவுகளே இல்லாமலும் போய் விடுகின்றன.

மாவட்ட அமர்வு நீதிபதி அவர்கள், இந்த தண்டனைக்கான உத்தரவை வழங்கிய போது குறிப்பிட்டுள்ளது என்றைக்கும் நினைவுகூரத் தக்கதாகும்.- "நீதிமுறையில் உள்ள சாதியப் பாகுபாடு மற்றும் சட்டத்தை அமல்படுத்துவதில் உள்ள குறைபாடு பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது" .சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு சமத்துவம், சமூகநீதி. சகோதரத்துவம், சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்றும் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அரசியலமைப்புச் சட்டம் உறுதியளிக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால், நடைமுறையில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் உறுதியற்ற நிலைப்பாட்டால், சில சமயங்களில் (நீதித்துறையின் மீது நம்பிக்கை இழக்கச் செய்யும் வகையில்) நீதிமன்றங்களின் கண்ணை மறைக்கும் அதீத சாதிய பாகுபாட்டால், பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989 பல் பிடுங்கப்பட்ட நிலையில்தான் உள்ளது.

இப்படிப்பட்ட சூழலில், இந்தத் தீர்ப்பானது உண்மையிலேயே, சாதியாதிக்க சக்திகளுக்கு ஒரு எச்சரிக்கையாகும். அரசுக்கும் சாதிய ஆதரவாளர்களுக்கும் தீண்டாமையையும் சாதியத்தைக் கொண்டாடுபவர்களுக்கும்கூட எச்சரிக்கையாகும். சாதி ஒழிப்புதான் சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதில், சமத்துவத்திற்கான போராட்டத்தில் மிக முக்கியமானதும் தீவிரமானதும் ஆகும். சாதி ஒழிப்புக்கான எந்தவொரு நிகழ்வும் சாதிய கருத்தியல் மற்றும் பொருளாதார அடித்தளங்களுக்கு எதிரான, மனுதர்மம் மற்றும் அதன் அடிப்படைக்கு எதிரான இடைவிடாத போராட்டத்தை முன்னெடுக்கும். உண்மையில் எந்தவொரு போராட்டத்தின் பகுதியாக சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டமும் இருக்க வேண்டும். மரக்கும்பி தலித் மக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த போராட்டமானது தலித் மக்கள், இடதுசாரிமற்றும் முற்போக்கு சக்திகள் ஒன்றுபட்டு அதைச் சாதிக்க முடியும் என்பதை செயல்படுத்திக் காட்டியிருக்கிறது. ❐

**தமிழாக்கம் – சங்கரநம்பி**

**தலையங்கம் தொடர்ச்சி..**

திசை திருப்பி தனியார்மயக் கொள்கைகளை அமல்படுத்திடுவதற்கான முயற்சிகளை, நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். கீழ்ப்பாக்கம் மருத்துவமனையானது மனநல மருத்துவத்திற்கு பெயர் பெற்ற அரசு மருத்துவமனையாகும். அதுவும் அரசின் தலைமை மனநல மருத்துவமனையாகும். ஒரு தலைமை மருத்துவமனையின் நிர்வாகம் சரியில்லை என்று சொல்லி அதை தனியார் நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்வது என்பது ஒட்டுமொத்த மருத்துவ சேவையையே தனியாரின் கையில் கொடுப்பதற்கான நடவடிக்கையே அன்றி வேறு என்னவாக இருக்க முடியும். மனநல மருத்துவம், சிகிச்சையானது நீண்ட காலத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டியது. பல சமயங்களில் மனநலம் பாதிக்கப்பட்டோரை உள் நோயாளிகளாகச் சேர்த்து மாதக் கணக்கில் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை இருக்கும். அப்படி மாதக் கணக்கில் உள் நோயாளியாக, எவ்வித கட்டணமுமின்றி, வைத்து சிகிச்சை கொடுப்பார்களா தனியார் நிர்வாகத்தினர்? இன்றைய அரசியல், சமூகப் பொருளாதார, வாழ்க்கைச் சூழலில், மென் பொருள் நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்கள் முதல் அன்றாடங்காய்ச்சிகளாக உள்ளவர்கள் வரை மன அழுத்தத்திற்கு, மன நோய்க்குப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், மன நல மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட வேண்டும். ஆராய்ச்சி மற்றும் தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மருத்துவர்களை உருவாக்கும் ஒரு கல்வி நிறுவனமாக மனநல மருத்துவமனை செயல்பட வேண்டும். மக்களின் மனநலத்தை மேம்படுத்தும் திட்டங்கள் வேண்டும். இவையெல்லாம் அரசிடம் அந்த நிறுவனம், மருத்துவமனை இருந்தால் மட்டுமே சாத்தியம். மக்கள் நல அரசு என்று சொன்னால், மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் அரசே நிறைவேற்ற வேண்டும். அதிலும் குறிப்பாக மருத்துவம், சுகாதாரம், கல்வி இம்மூன்றும் கண்டிப்பாக அரசாங்கத்தின் கைகளில்தான் இருக்க வேண்டும். அப்போது மட்டும்தான் மக்களுக்கு லாப நோக்கம் இல்லாத இலவச மருத்துவம், கல்வி அளிக்க முடியும். சுகாதாரமான வாழ்க்கைச் சூழல் கிடைக்கும். அதற்கு ஆட்சியாளர்கள் ஊழலை ஒழித்து, அரசு நிர்வாகத்தை மேம்படுத்திட வேண்டும். அப்போதுதான் அது மக்கள் அரசு ஆகும்.

# புதுச்சேரியின் குறடுகளை (நடைபாதைகளை) எவர் ஆக்கரமிக்கின்றனர்?



புதுச்சேரி கடைத்தெருக்களில் இரண்டு விதமான வணிகம் நடைபெறுகிறது. ஒன்று நிரந்தரமாக கடைகள் வைத்து வணிகம் செய்தல். மற்றொன்று நடைபாதை (குறடு) ஓரங்களில் தற்காலிக கடைகள் அமைத்து போக்குவரத்துக்கு இடையூறின்றி, பொது மக்களுக்கு அன்றாடம் பயன்படும் பொருட்களைக் குறைந்த விலையில் வணிகம் செய்வது. இரண்டாவது வகையினர் மிகச் சிறிய மூலதனம் கொண்டு வியாபாரம் செய்து மிகக் குறைந்த வருமானம் ஈட்டும் அன்றாடங்காய்ச்சிகள். நடைபாதைகளில் நடைபெற்று வரும் தெரு வணிகத்தை, தெரு வணிகர்கள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு, தெரு வணிகம் ஒழுங்கு படுத்துதல்) சட்டம் 2014 அங்கீகாரம் செய்துள்ளது. நாடு முழுவதும் 10 மில்லியன் தெரு வணிகர்கள் உள்ளனர். விவசாயம் சாராத, அமைப்புசாரா தொழிலாளர்களில் 14% தெரு வணிகர்களாக உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் புலம்பெயர்ந்தவர்களாகவும் நிரந்தர வேலை இழந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

புதுச்சேரி நகராட்சியில் 1325 தெரு வணிகர்களும் உழவர்கரை நகராட்சியில் 920 தெரு வணிகர்களும் அனுமதி உரிமம் வைத்துள்ளனர். நகராட்சிகளின் உரிமம் பெறமுடியாத தெரு வணிகர்களும் சில ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களில் 54 விழுக்காடு பெண்கள். இத்தகைய தெரு வணிகர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காகச் செய்யும் தொழில் காரணமாக சுய தொழில் செய்வோர் ஆகிறார்கள். ஆனாலும் அவர்களை, ஒப்பீட்டளவில் பெரிய வணிகத்தில் முதலீடு செய்து, நிரந்தரமாக கடை நடத்தி வரும் சிறிய, நடுத்தர பெரிய வணிகர்களுடன் ஒப்பிட முடியாது. இத்தகைய நிரந்தர கடை வணிகர்களுக்கு போதுமான வசதிகள் இருந்தும், அவர்களின் வணிகப் பொருட்களை நடைபாதை வணிகர்கள் போல் நடைபாதைகளில் தங்கள் பொருட்களை காட்சிப்படுத்தியும், விளம்பர தட்டிகள் வைத்தும் வணிகம் செய்து வருவது வாடிக்கையாகி வருகிறது. இத்தகைய நிரந்தர கடை வணிகர்கள் தங்கள் ஊழியர்களுக்கு தனியான வாகன நிறுத்த வசதி செய்து தராமல் இருப்பதால் ஊழியர்களின் வாகனங்கள் பல மணி நேரங்கள், சாலைகளை, நடைபாதைகளை ஆக்கிரமித்துக் கொண்டு கடைகளுக்கு எதிரே நிறுத்தப்படுகின்றன. இதனால் குறடுகள் மேல் நடந்து செல்வோர்க்கு இடையூறு ஏற்படுத்துகிறது.

மேலும் புதுச்சேரியின் பல முக்கிய தெருக்களில் வீட்டு உரிமையாளர்கள் அவர்களுக்குப் பக்கத்தில் உள்ள குறடுகளை மறித்து கம்பி வேலி அமைத்துக் கொள்கின்றனர். இன்னும் சிலர் கடைகள் வைத்துக் கொள்ள வாடகைக்கும் விடுகின்றனர்.

புதுச்சேரியின் புல்வார்(Boulevard) பகுதிகள் மட்டுமின்றி புறநகர் பகுதிகளிலும் அங்காடிகள் எண்ணிக்கை உயர்ந்து வருகின்றன. அதன் அக்கம் பக்கமாகவே தெரு வணிகர்களும் வளர்ந்து வருகின்றனர் இந்த விவரங்கள் நகராட்சிகளின் நிர்வாகங்களுக்கு நன்கு தெரியும்.

எனவே உள்ளாட்சித்துறை, பொதுப் பணித்துறை, காவல்துறை தெரு வணிகத்தை நிரந்தர வணிகர்களின் வணிகத்தோடு இணைத்துப் பார்த்தல் கூடாது. தெரு வணிகம் என்பது நகரத் தொழில்களில் ஒரு அங்கமாகும். நடைபாதை வணிகத்தை மேம்படுத்துவதற்கு ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்கள்படி பிரதம மந்திரி தெரு வணிகர் சுயசார்பு நிதி (PM SVAN Nidhi) Prime minister street vendors Atma Nirbhar திட்டத்தின் கீழ் வங்கிகளும் ரூபாய் பத்தாயிரம் முதல் ரூபாய் ஐம்பது

ஆயிரம் வரை மானியம் மற்றும் குறைந்த வட்டியில் கடன் வழங்குகின்றன. இவ்வாறாக சாலையோர வணிகத்தை அரசு அங்கீகாரம் செய்துள்ளது.

கச்சித நகர (Smart City) திட்டத்தின் கீழ் ரூபாய் 1860 கோடி மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னரும் கூட புதுச்சேரியின் குறடுகள் (நடைபாதைகள்) பல இடங்களில் சரிந்தும் சமனற்றும் பள்ளங்கள், குழிகளுடன் காணப்படுகின்றன. இதனாலாலேயே குழந்தைகள், முதியோர், பெண்கள் நடைபாதைகளைத் தவிர்த்து சாலைகளின் குறுக்கு நெடுக்காக நடக்கின்றனர். இதற்கு காரணம் நடைபாதை வணிகர்கள்தான் என்று பொதுப் புத்தியில் தவறாகப் பதிய வைக்கப்படுகிறது. உண்மையில், புதுச்சேரி நகராட்சி, உழவர்கரை நகராட்சி இவைகளின் உட்புறச் சாலைகள், 100 அடி, 45 அடி சாலைகளின் இணைப்புச் சாலைகள் வாகன போக்குவரத்திற்கு ஏற்ப தரம் உயர்த்தப்படாமல் இருப்பதால் நகரத்தில் அவசியமற்ற, தேவையற்ற போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றன. மேலும் முக்கிய சாலைகளுடன் போதுமான இணைப்புச் சாலைகள் இல்லாததும் போக்குவரத்து நெருக்கடியை அதிகரிக்கின்றன.

உண்மை இவ்வாறு இருக்க, ஏதோ நடைபாதை வணிகர்கள் தான் நடைபாதைகளை ஆக்கிரமித்து இருப்பதாகவும் அதனால் பொதுமக்கள் அவதிப்படுவதாகவும் கூறப்படுகிறது. இது பண்டிகை காலங்களில் நடக்கும் வணிகத் திருவிழாவின் போது நிரந்தரக் கடை வணிகர்கள் லாபம் சம்பாதிப்பதற்கு ஆதரவான வாதமாகும். கச்சித நகரத்திட்டதின் கீழ் கூட நேரு வீதி நடைபாதைகள் தரத்தை புதுச்சேரி நகராட்சி மேம்படுத்தவில்லை. காந்தி வீதி, மாதா கோயில் வீதி, இரங்கப் பிள்ளை வீதி, செட்டி தெரு, பாரதி வீதி, அம்பலத்தாடையர் மடம் வீதி, அரவிந்தர் வீதி, வைசியாள் வீதி போன்ற முக்கிய வணிகத் தெருக்களில் குறடுகளையே காண முடிவதில்லை. புல்வார் (Boulevard) முழுவதும் பெரும்பாலான தெருக்களில் குறடுகள் உள்ளன. பல தெருக்களில் வீட்டு உரிமையாளர்கள் குறடுகளை ஆக்கிரமித்து தாழ்வாரம் ஆக்கிவிட்டனர் அல்லது சிறு வணிகர்களுக்கு வாடகைக்கு விட்டுள்ளனர். இருசக்கர வாடகை நிலையங்களும் தெருக்களை அடைத்து வண்டிகளை நிறுத்தியுள்ளன. வண்டிகள் நிறுத்த வளாகங்கள் அவைகளிடம் இல்லை.

புதுச்சேரி நகராட்சி புல்வார் (Boulevard) முழுவதும் உள்ள குறடுகளை, நடந்து செல்வோர், நடைபாதை ஓர தெரு வணிகர்கள் நலன்கள் கருதி போக்குவரத்து நெரிசலை குறைத்திட, மீட்டெடுக்க வேண்டிய அவசியமும் தேவையும் உள்ளன. சில தெருக்களில் மத அமைப்புகளும் குறடுகளை ஆக்கிரமித்து வேலியிட்டுள்ளன என்பதை நகராட்சி கவனத்தில்கொண்டு குறடுகளை அவர்களிடமிருந்து மீட்டெடுப்பதில் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும். அப்பொழுதுதான் பொது மக்களுக்கும் வணிகர்களுக்கும் வசதியா இருக்கும். நடைபாதை(குறடு) வணிகர்களும் நகரத்தின் ஓர் அங்கமாக வாழ்வாதாரத்துடன் வாழ்ந்திட இத்தகைய மீட்டெடுப்பு உதவும். சுற்றுலா நகரத் திட்டம், தெரு வணிகம் தடை செய்யப்பட்ட இடம் என்ற பெயரில் என்ஆர் காங்கிரஸ் - பாஜக கூட்டணி அரசு, அதிகாரிகளை பயன்படுத்தி தெரு வணிகர்களை நடைபாதை ஆக்கிரமிப்பாளர்கள் என சித்தரித்து, தண்டம் விதித்து, வணிகத் திருவிழாவில் பங்கெடுக்கும் நிரந்தர வணிகர்களுக்கு ஆதரவாக அவர்களை அப்புறபடுத்துகிறது. இச் செயலை உடனடியாக நிறுத்த வேண்டும். நிரந்தரக் கடை நடத்துபவர்களோடு தெரு வணிகர்களும் இணைந்தால்தான் வணிகத் திருவிழாவும் வெற்றியடையும். நகரப் பொருளாதார வளர்ச்சியின் ஓர் அங்கமாக விளங்கும் நடைபாதை வணிகர்களுக்கு குடிநீர், குளியலறை, கழிப்பறை, ஓய்வறை, பொருள் பாதுகாப்பு இடம் ஏற்படுத்திக் கொடுத்திட வேண்டும். உரிமம் கிடைக்காத அனைத்து தெரு வணிகர்களுக்கும் உரிமம் வழங்கி அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு இருக்கிறது. அதே நேரத்தில், பெருமளவில் சங்க ரீதியில் அமைப்பாக்கபடாமல் உள்ள தெரு வணிகர்களை அமைப்பாக்கி அவர்களது அரசியல், வாழ்வாதார உரிமைகளை உறுதி செய்ய வேண்டிய பணிகள் புரட்சிகர தொழிற்சங்கத்திற்கு அவசியமாகும். கச்சித நகரத் திட்டமிடல் மற்றும் தெரு வணிகர் சட்டம் 2014 சாராம்சத்தில் தெரு வணிகர்களை, நடைபாதை வணிகர்களை நடைபாதைகளில் இருந்து அப்புறப்படுத்தவே முயற்சிக்கின்றன. இது பல லட்சக் கணக்கானவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குள்ளாக்கும்.

தெரு வணிகம், நகர வாழ்க்கை, வாழ்வாதாரத்தின் ஓர் அங்கமே! ❐

**–சோபா–**

# ஏஐசிசிடியு தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்கக் கூட்டம்




ஏஐசிசிடியு தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்கத்தின் மண்டல போராட்டத்திற்கான ஆயுத்த கூட்டம் திருப்பத்தூரில் நடைபெற்றது. கூட்டத்தில் டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்கத்தின் மாநில சிறப்புத் தலைவர் சொ.இரணியப்பன், மாநில பொதுச்செயலாளர் சந்திரகுமார், மாநிலத் தலைவர் சிவா மற்றும் சிபிஐஎம்எல் வேலூர் மாவட்டச் செயலாளர் சரோஜா, ஏஐசிசிடியு மாவட்ட பொதுச் செயலாளர் சீ.அ.சிம்புதேவன், ஏஐசிசிடியு மாவட்ட குழு உறுப்பினர் வாசுதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிபிஐஎம்எல் - ஏஐசிசிடியு பயிற்சி வகுப்பு- தர்மபுரி




தர்மபுரியில் சிபிஐஎம்எல் மற்றும் ஏஐசிசிடியு முன்னணி ஊழியர்களுக்குப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. அந்த பயிற்சி வகுப்பிற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் முருகன் துவக்கி வைத்துப் பேசினார். இகக(மாலெ) மத்தியக் குழு உறுப்பினர் அ.சந்திரமோகன் சிறப்புரையாற்றினார்.

மாலெ தீப்பொறி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)**

**அரசியல் கருத்தியல் ஆயுதம்**

**மாதம் இருமுறை**
**ஆண்டுச் சந்தா ரூ. 200/-**
**தனி இதழ் ரூ.10/-**

# தூத்துக்குடி தூய்மைப் பணியாளர்கள் போராட்டம்

தமிழக அரசு தூய்மை பணிக்காக அறிவித்த குறைந்த பட்ச கூலி அரசாணை GO/62/2017ன்படி ஓட்டுனர்களுக்கு ரூ763/- தூய்மைபணியாளர்களுக்கு ரூ725/- நாள் கூலி வழங்க வேண்டும். உடனடியாக குறைந்த பட்ச கூலி ஆணை ROC NO K3/3023559/2023ன்படி தூய்மை ஓட்டுனர்களுக்கு ரூ598 தூய்மை பணியாளர்களுக்கு ரூ497 வழங்க வேண்டும், P.F கணக்கை முறைப்படுத்த வேண்டும். அனைவருக்கும் ESI அட்டை வழங்க வேண்டும், போனஸ் 8.33 சதவிகிதமும் கருணைத் தொகை 11.67 சதவிகிதமும் வழங்க வேண்டும், தொழிலாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்க வேண்டும், சுழற்சி அடிப்படையில் வார விடுமுறை வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தூத்துக்குடி தூய்மைப் பணியாளர்கள் சங்கத்தின் சார்பாக 5.11.2024 அன்று ஆர்ப்பாட்டம் ஏஐசிசிடியு மாநிலக் குழு உறுப்பினர் சகாயம் தலைமையில் நடைபெற்றது. ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் சங்கரபாண்டியன், இகக(மாலெ) மாவட்டப் பொறுப்பாளர் முருகன் ஏஐசிசிடியு மாவட்டப் பொறுப்பாளர் சிவராமன் மற்றும் மின்னல் அம்ஜத், பொன்ராஜ், சுகுமார், பாலமுருகப் பெருமாள் உள்பட 300 பேருக்கு மேல் கலந்து கொண்டனர். கோரிக்கைகள் மீது ஏஐசிசிடியு சங்கம் சார்பாக தொழிலாளர்கள் ஒட்டுமொத்தமாக விடுப்பு எடுத்து மறியல் போராட்டம் நடத்த அறிவிப்பு செய்யப்பட்டு தொழிலாளர்களும் தலைவர்களும் போராட்ட இடத்தில் அணி திரண்டு இருந்த நிலையில், மறியல் வேண்டாம், ஆர்ப்பாட்டமாக நடத்திட வேண்டும் என்று காவல்துறையினர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் கோரிக்கை ஆர்ப்பாட்டமாக நடத்தப்பட்டு, தொழிலாளர்களும் தலைவர்களும் அதில் உரையாற்றினார்கள். ஏஐசிசிடியு சங்கம் தொழிலாளர்களுக்கு தீபாவளி போன்ஸாக 8.33 சதவிகிதமும் கருணைத் தொகையாக 11.67 சதவிகிதமும் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்துப் போராடிக் கொண்டிருக்கிற நிலையில், குறைந்த எண்ணிக்கையில் தொழிலாளர்களைக் கொண்டுள்ள மாற்றுச் சங்கம் ஒன்று, தொழிலாளர்களுக்கு இருக்கும் தீபாவளி நெருக்கடியைப் பயன்படுத்தி மாநகராட்சி நிர்வாகம் மற்றும் ஒப்பந்ததாரிடம் போனஸிற்குப் பதிலாக தீபாவளி முன்பணம் வழங்கினால் போதும் என்று கோரிக்கை வைத்து அதன்படி தொழிலாளர்களுக்கு முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இது தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டப்படியான உரிமையான போனஸை கிடைக்க விடாமல் செய்ததோடு, முன்பணம் என்ற பெயரில் பணத்தை வாங்கிக் கொடுத்து பின்னர் தொழிலாளர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்து கொள்ள வழி செய்துள்ளது. இதை ஏஐசிசிடியு சங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதோடு தொழிலாளர் நலனுக்கு எதிரானது என கண்டனத்தையும் பதிவு செய்துள்ளது. தொழிலாளர்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை தொடர்ந்து போராட முடிவு செய்துள்ளார்கள்.

## தூய்மைப் பணியாளர்கள் உள்ளிருப்புப் போராட்டம்



தென்காசி மாவட்டம், செங்கோட்டை நகராட்சியில் பணிபுரியும் ஏஐசிசிடியு ஒப்பந்த தூய்மை பணியாளர்கள், தீபாவளி போனஸ் ஒரு மாதம் சம்பளம் கேட்டு காலை 6 மணி முதல் கண்டன உள்ளிருப்புப் போராட்டம் நடைபெற்றது. ஒப்பந்தக்காரர் ராமன் அன் கோவின் மேலாளர் அசோக்குமார் ஏஐசிசிடியு தொழிற்சங்க தலைவர்களிடமும் தூய்மைப் பணியாளர்களிடமும் இரண்டு நாள்களில் போனஸ் வழங்கப்படும் என்று உறுதி அளித்ததின் பேரில் உள்ளிருப்பு போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. போராட்டத்திற்கு முருகேஸ்வரி, குத்தாலிங்கம், பகவதி,ஜோதி தலைமை தாங்கினார்கள். ஏஐசிசிடியு தென்காசி மாவட்ட ஜனநாயக தூய்மை பணியாளர்கள், காவலர்கள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் எம். வேல்முருகன், பொதுச் செயலாளர் தோழர் ஜெ. சுப்பிரமணியன், சிபிஐ எம் எல் தென்காசி மாவட்டச் செயலாளர் புதியவன் என்ற சுப்பிரமணியன் ஆகியோர் உரையாற்றினர். ❒

## தோழர் ரதி ராவ்விற்கு வாழ்த்துகள்

கர்நாடக மாநிலத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் பொறியியல் மற்றும் கணிதம் ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் ஒன்றாம் தேதி கர்நாடகா ராஜ் யோக் சபாவில் விருதுகள் வழங்கப்படும் அதில் தோழர் டாக்டர் ரதி ராவ் அவர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பு களுக்காக விருது வழங்கப்பட்டுள்ளது. தோழர் ரதி ராவ் அவர்கள் பல ஆண்டுகளாக முற்போக்கு, இடது பெண்கள் இயக்கத்தின் குறிப்பிடத்தக்க பகுதியாக இருந்து மைசூர் மற்றும் கர்நாடகா முழுவதும் பார்ப்பனிய ஆதிக்கம் மற்றும் வகுப்புவாதத்தின் தடைகளை தகர்த்து அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் தேசிய தலைவராக நாடு முழுவதும் பெண்கள் உரிமை போராட்டத்தை முன்னெடுப்பதில் முக்கிய பங்காற்றி உள்ளார். இந்த விருது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்கான அங்கீகாரம் மட்டுமின்றி துறையில் பெண்களின் பங்களிப்பு அதிகரிப்பதற்கும் ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளது












# பஞ்சமி நிலத்தை மீட்க சிபிஐ(எம்எல்) நடத்தி வரும் போராட்டம்

செங்கற்பட்டு மாவட்டம் வண்டலூரில் குடியிருந்த பட்டியலின மக்களுக்கு அதே ஊராட்சியில் வனத்துறை (பாரஸ்ட்) நிலம் 1927 ல் நிலவகை மாற்றம் செய்து (டிசி லேண்ட்) பஞ்சமி நிலமாக 50 குடும்பங்களுக்கு தலா 1 ஏக்கர் வீதம் 50 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இதில் பட்டியலின (எஸ்சி) மக்கள் (காட்டு கொள்ளை) உழுது பயிரிட்டு வந்தனர். 1960ஆம் ஆண்டு வண்டலூர் பஞ்சாயத்துத் தலைவராக இருந்த இராஜரத்தின நாயக்கர் பட்டியலின மக்கள் உழுது பயிரிட்டு வந்த நிலத்தை அவர்களின் ஏழ்மையை பயன்படுத்தி இந்து பத்திரிகை நிறுவனத்தை சார்ந்த இராமனுஜம் அய்யங்காருக்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்து கொடுத்தார். இதற்குக் கைமாறாக அவரது மகன் காசிலிங்கம் என்பவரை இந்து பத்திரிகை தனது நிறுவனத்தில் வேலைக்கு அமர்த்தியது. இந்த சூழ்நிலையில்தான் காட்டுக் கொள்ளை என்று பயிரிட்டு வந்த நிலம் இந்து அலுவலக நிலம் என்று அழைக்கப்பட்டு வந்தது. அந்த நிலம் சீதக்காதி அறக்கட்டளைக்கு விற்பனை செய்யப்பட்டு, இன்றைய நிலையில் கிரசண்ட் பொறியியல் கல்லூரி, கிரசண்ட் பள்ளி ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

ஆதி திராவிடர் மக்களிடம் இருந்து பஞ்சமி நிலம் அபரிக்கப்பட்டதை அறிந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலை சார்பாக 27.03.2008ல் சட்டமன்ற முற்றுகைப் போராட்டம் மூலம் அப்போதைய தமிழக முதல்வர் திரு.மு.கருணாநிதி அவர்களுக்கு பஞ்சமி நிலத்தை மீட்டுத் தரக் கோரி கடிதம் கொடுக்கப்பட்டது. அரசு நடவடிக்கை எதுவும் எடுக்காத சூழ்நிலையில் 28.07.2012 ல் கிரசண்ட் பொறியியல் கல்லூரி முன்பு மக்கள் பங்கேற்புடன் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 23.02.2021 அன்று வண்டலூர் வட்டாட்சியருக்கு மனு செய்த அடிப்படையில் விசாரணை நடைபெற்றது. அது முடிவுற்ற நிலையில், மேல் முறையீட்டு விசாரணைக்காக மார்ச் 2023 ல் தாம்பரம் கோட்டாட்சியர் முன்பு விசாரணை நடைபெற்று முடிந்தது. இந்தச் சூழ்நிலையில் தாம்பரம் கோட்டாட்சியர் இதுவரையிலும் எவ்வித உத்தரவும் பிறப்பிக்காமல் இருந்து வருகிறார்.

பஞ்சமர் அல்லாதவரிடம் உள்ள பஞ்சமர் நிலங்களை மீளப்பெற்று மீண்டும் பஞ்சமர்களிடம் ஒப்படைப்பது தொடர்பாக முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள், தலைமை செயலாளர் தலைமையில் உயர்நீதிமன்ற உத்தரவு அடிப்படையில் ஆணையம் அமைத்தார். அதிமுக ஆட்சியில் இயங்கி வந்த ஆணையம், 3 ஆண்டு கால திமுக ஆட்சியில் கண்டு கொள்ளப்படவில்லை.

கிரசண்ட் பொறியல் கல்லூரி உள்ள இடம் பஞ்சமி நிலம் என்பற்கான அனைத்து சான்றுகளையும் வருவாய்துறைக்கு சமர்பித்த பிறகும், அது பஞ்சமி நிலம் தான் என்பதை உறுதிபடுத்த வருவாய்துறை தயங்குகிறது. தாம்பரம் கோட்டாட்சியர் விசாரணையில் உள்ள மனு மீது மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க கோரி 30.09.2024 அன்று வீடு, வீட்டுமனை பட்டா கோரிய இயக்கத்தின் மூலம் வண்டலூர் வட்டாட்சியரிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலை சார்பாக மனு கொடுக்கப்பட்டது. போராட்டம் தொடர்கிறது.

**– அரசாங்கங்கள் நியமித்த ஆணையங்களும் கமிட்டிகளும் இந்தப்பிரச்சனைக்கு தீர்வுகாண முடியவில்லை. ஆட்சியாளர்களாக இருந்தவர்களும் ஆட்சியாளர்களின் ஆதரவு பெற்றவர்களுமே பஞ்சமி நிலத்தை அபகரித்து வைத்துள்ளனர். பஞ்சமி நிலம் குறித்த ஏராளமான வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் தூசு படிந்து கிடக்கின்றன. தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு செயல்படுத்தப்பட்டதா என்ற விவரமும் இல்லை. இத்தனைப் பிரச்சனை களுக்கும் முடிவுகாணுகிற வகையில் பஞ்சமி நிலங்களை கண்டறியவும் அவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி; உரிய தலித்துகளிடம் ஒப்படைக்கவும் வகை செய்ய அரசாங்கம் தனிச்சட்டம் ஒன்றை இயற்ற வேண்டியது அவசர அவசியம் என சிபிஐ(எம்எல்) கோரி வருகிறது –**

# மக்கள் சந்திப்பில் ஓர் அனுபவம்

மக்கள் சந்திப்பு பரப்புரையின் ஒரு பகுதியாக அனைத்திந்திய விவசாயகிராமப்புற தொழிலாளர்கள் சங்கம் (AIARLA) சார்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களில், பாப்பாக்குடி, மானூர் பகுதிகளுக்கு உட்பட்ட கிராமப்புறங்களில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத் தொழிலாளர்களை அவர்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளிலும் வேலைசெய்யும் இடங்களிலும் நேரடியாகச் சென்று சந்தித்து நூறுநாள் வேலைதிட்டக் கோரிக்கைகளை துண்டுப் பிரசுரம் விநியோகித்து 15 நாள்கள் பரப்புரை நடைபெற்றது.

நூறுநாள் வேலைத் திட்டத் தொழிலாளர்கள், அரசு நிர்வாகத்தின் உழைப்புச் சுரண்டல், ஊதியவெட்டு, அடிப்படை வசதியின்மை போன்ற அவலநிலையில் பணிபுரிந்து வருகிறார்கள். அந்த தொழிலாளர்களை நேரடியாகச் சந்தித்தபோது வேலை செய்யும் இடத்தில் அவர்கள் அனுபவிக்கின்ற இன்னல்களை, மனக் குமுறல்களைக் கொட்டினார்கள். நூறுநாள் வேலைதிட்டத்தில் அரசு அறிவித்த சம்பளம் நாள் ஒன்றுக்கு ரூ.319. ஆனால் அரசாணைப்படியான சம்பளம் ரூ.319 எந்தவொரு கிராமத்திலும் வழங்கப்படவில்லை. ரூ240, 250, அதிகபட்சமாக ரூ.280தான் வழங்கப்படுகிறது. மேலும் தொழிலாளர்கள் குடியிருக்கும் இடத்திற்கும் பணிபுரியும் இடத்திற்கும் இடையே 5முதல் 10 கிமீ வரை இருப்பதால் போக்குவரத்து செலவுக்கே ரூ40 ரூபாய் போய்விடுகிறது. வேலை செய்யும் இடத்தில் ஒவ்வொரு தொழிலாளியும் கட்டாயம் 5முதல் 10அடி நீளம்வரை தோண்டினால் மட்டுமே கூலி வழங்கப்படும். ஆனால், அவர்கள் வேலை செய்யும் சில இடங்களில் குடிப்பதற்கு தண்ணீர் கூட கொடுக்கப்படுவதில்லை. அதுமட்டுமல்ல உணவு மற்றும் தேநீர் அருந்தும் இடைவேளை நேரங்களில் அமர்வதற்கு நிழலான இடவசதிகூட கிடையாது. அவர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்ற முட்செடிகளின் மீது கிழிந்த பாலிதீன் சாக்குகளைப் போட்டு அந்த நிழலில்தான் உணவு உட்கொள்கிறார்கள். கொத்தடிமை போல் தொழிலாளர்கள் நடத்தப்படுகிறார்கள். அவர்களின் அவல நிலை பற்றி தொழிலாளர்கள் தோழர்களிடம் கூறி கொண்டிருக்கும் போதே, எப்படி ஆங்கிலேய எஜமானர்கள் விசுவாசியான சில கங்காணிகள் வைத்திருந்தார்களோ அதேபோல் இப்போதுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து தலைவரும் அரசாங்க அதிகாரிகளும் தங்களுக்கு விசுவாசமாக சில கங்காணிகளை வைத்துள்ளார்கள். அவர்கள் தொழிலாளர்களைச் சந்தித்துப் பேசக் கூடாது என்றார்கள். பின்னர் பரப்புரை செய்யும் விவரம் பற்றி பஞ்சாயத்து தலைவர், அரசாங்க அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினார்கள். பாப்பாக்குடி ஒன்றியம் கல்லூர் பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதிகளில் பிரச்சாரம் நடைபெற்று வந்தபோது பஞ்சாயத்து தலைவர் அயர்லா கல்லூர் பகுதி பொறுப்பாளர் தோழர் முப்புடாதியைத் தொடர்பு கொண்டு "தேவையில்லாமல் பிரச்சாரம் செய்கிறீர்கள், கிடைக்கிற வேலையை கெடுத்து விடாதீர்கள், குடிக்க தண்ணி கூட கொண்டு வந்து உங்களால வேலை செய்ய முடியாதா, நீங்கள் கல்லூர் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது" என்று மிரட்டினார். பஞ்சாயத்து தலைவரின் மிரட்டலைக் கண்டு கொள்ளாமல் தொடர்ந்து பிரச்சாரம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு தொழிலாளர்களை திரட்டும் வேலையும் தொடர்ந்து நடந்தது. அதனால் சங்கப் பொறுப்பாளரிடம் பேசி எந்தப் பயனும் இல்லை என்று தெரிந்து கொண்ட பஞ்சாயத்து தலைவர் பஞ்சாயத்து கிளார்க் மூலம் 100 நாள் வேலை திட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு நேரடியாகப் போய் "நீங்கள் ஆர்ப்பாட்டத்திற்கு சென்றால் உங்களுக்கான வேலை அட்டையை பிடுங்கி வேலை இல்லாமல் செய்து விடுவோம்" என வீடுவீடாக சென்று மிரட்டினார்கள். பஞ்சாயத்து தலைவர் எப்படியாவது ஆர்ப்பாட்டத்தை நிறுத்தி விடவேண்டும்என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டார். திட்டமிட்டபடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பஞ்சாயத்துத் தலைவர் மிரட்டல் நடவடிக்கையையும் மீறி 50 தொழிலாளர்கள் 17.10.2024 அன்று கல்லூர் கிராமத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மன உறுதியோடும் உற்சாகத்தோடும் கலந்து கொண்டார்கள். சுத்தமல்லிப் பகுதியிலும் இதே போல் பிரச்சனையை தோழர்கள் சந்தித்தார்கள். வேலைப் பகுதியில் தொழிலாளர்கள் ஓய்வு எடுக்கும் நேரத்தில் சந்திப்பதற்குக் கூட தலைவரின் அனுமதி பெற்று வர வேண்டும் என்று அங்குள்ள ஒருவர் கூறி, தலைவருக்கும் தகவல் கொடுத்துள்ளார். ஆனால், தோழர்கள் அவருடன் பேசியபோது முதலில் எதிர்ப்பு காட்டியவர் பின்னர் எம்எல் கட்சித் தோழர்கள் என்றவுடன் அமைதியாகிவிட்டார்.

இந்த பரப்புரை இயக்கமானது பாப்பாக்குடி ஒன்றிய பொறுப்பாளர் வேலு, மானூர்ஒன்றிய பொறுப்பாளர் செல்வம் தலைமையில் நடை பெற்றது. அந்த இயக்கத்தில் அயர்லா ஒன்றியக் கமிட்டி உறுப்பினர்கள் முப்பிடாதி, மூக்காண்டி, ஆறுமுகம், வெயிலுமுத்து மற்றும் இகக(மாலெ) மாநிலநிலைக்குழு உறுப்பினர் சங்கரபாண்டியன், மாநிலக் குழு உறுப்பினர் கணேசன், மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள். ❐

**–சுந்தர்**




நெல்லை கல்லூர்

## பத்திரப் பதிவு முறைகேடுகளை கண்டித்து

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 28.10.2024 அன்று பத்திரப் பதிவு முறைகேடுகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் தோழர் சங்கர் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ எம்எல் கட்சி மாவட்டச் செயலாளர் ஆறுமுகம் கண்டன உரை நிகழ்த்தினார் .வழக்கறிஞர்சத்தியமூர்த்தி மற்றும் மாவட்ட குழு உறுப்பினர்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். பின்னர் மாவட்ட ஆட்சியரிடத்தில் நடவடிக்கை கோரி மனு கொடுக்கப்பட்டது.






தூய்மைப் பணியாளர்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம்

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.11.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023







Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh